Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை (28.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 362

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)




03




06




07




09



தீயில் போடுக!

18

## ‘உதயனுக்கு’ இறுதி எச்சரிக்கை விடுத்தார் யாழ். மாவட்ட நீதிபதி!

(நமது நீதிமன்ற நிருபர்)

உண்மைகளைத் திரித்தும் மறைத்தும் மோசடியாக செய்திகளை வெளியிடுவதாக உதயன் பத்திரிகைக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆதாரங்களுடன் தொடுத்திருந்த ஆயிரம் கோடி ரூபா இழப்பீடு கோரும் அவதூறு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உதயன் பத்திரிகை உரிமையாளர் மற்றும் பிரதம ஆசிரியர் சார்பாக தோன்றியிருந்த சட்டத்தரணிக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருந்தார் யாழ். மாவட்ட நீதிபதி ஆனந்தராஜா. அமைச்சரின் புகாருக்கு பதில் அளிக்க உதயன் காலதாமதப்படுத்துவதால் கடுப்படைந்த நீதிபதி இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் பதினாறாம் திகதி உதயன பத்திரிகை பதிலளிக்க வேண்டுமெனக் கடும் தொனியில் கட்டளையிட்டிருந்ததுடன், தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்கச் சட்டத்தில் ஏற்பாடுகள் உண்டெனவும் எச்சரித்தார்.

இவ் வழக்கில் அமைச்சர் டகளஸ் தேவானந்தா சமர்ப்பித்திருந்த. பிராதுக்கு பதில் அணைக்க உதயன் பத்திரிகை உரிமையாளர் மற்றும் பத்திராதிபர் சார்பாக தோன்றியிருந்த சட்டத்தரணிகள் காலதாமதப்படுத்துவதால் கடுப்பாகியிருந்த நீதிபதியே இக்கட்டளையை விடுத்தார். இவ் வழக்கில அமைச்சரை பிரதி

19 ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கியதில் மல்லாவி இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

மல்லாவியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டை துணைவிச் சந்தியில் உள்ள வாகனத்தரிப்பிடம் ஒன்றில் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை 7.20 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மல்லாவி அனிஞ்சியன் குளத்தைச் சேர்ந்த கந்தையா திருக்குமரன் (வயது - 29) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த வாகனத்தரிப்பிடத்தில் வேலை பார்க்க வந்த அவர நேற்றுக் காலை வாகனமொன்றை ஸ்பிறேயரைப் பயன்படுத்திக் கழுவிக்கொண்டிருக்கையிலேயே அவர் மீது மின்சாரம் பாய்ந்து ஸ்தலத்தில் இறந்ததாகத் தெரியவருகின்றது.

இவரது சடலம் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (பா,இ)

# கிளி. பல்கலை சிரமதானம் மூவாயிரம் பேர் பங்கேற்பு

## விசமப் பிரசாரங்களுக்குப் பதிலடி!



கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ். பல்கலைக் கழகத்தின் விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடங்களுக்கான காணியைத் துப்புரவாக்கும் நேற்றைய மாபெரும் சிரமதானப் பணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 3,000 பேர் வரையில் உணர்வுபூர்வமாகப் பங்கேற்று தமது உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

வடக்கு மாகாணத்தின் பல்கலைக்கழகமான யாழ். பல்கலைக்கழம் பரந்த விஸ்தீரணமுள்ள கிளிநொச்சி அறிவியல்நகர் காணியில் விவசாய, பொறியியல் பீடங்களை அமைப்பதற்கான பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்தச் சிரமதானப் பணி, அரசியல் ரீதியான நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது என்றும், கல்விச் சமூகம் இதுகுறித்து விசனமடைந்துள்ளதாகவும் இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட விசமப் பிரசாரத்தைப் பொய்யாக்கும் வகையில் மக்களின் உணர்வுபூர்வமான பங்கேற்பு இந்தச் சிரமதானத்தில் காணப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்தச் சிரமதானப் பணியில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 26 பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுடன், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள்,

19 ஆம் பக்கம் பார்க்க

## உயர் பாதுகாப்பு வலய நீக்கம் இந்தியாவுடன் பேசவுள்ள கூட்டமைப்பு

வடக்கிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்குவது தொடர்பாக அரசிடம் வலியுறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது. வரும் ஒகரோபர் 10 ஆம் திகதி புதுடில்லி செல்லவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இது தொடர்பான கோரிக்கையை .இந்தியாவிடம் முன் வைக்கவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோருடனான சந்திப்புக்கு வருமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில், கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் குறித்து

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவில் பங்கேற்க கூட்டமைப்பு தயங்குவது ஏன்?

### கேட்கிறார் அமைச்சர் ராஜித

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகத் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இடம்பெற தயக்கம் காட்டுவது ஏன் என்று புரியவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக ஆறு மாதங்களில் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்படாவிடின் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப்படுத்தவும் முடியும் என்றும் அமைச்சர் குறிப பிட்டார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் மற்றும் தேசியப் பிரச்சினை தீர்வுத்திட்ட விவகாரம் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற நோக்கத்தில் ஆளும் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## ஏவுகணைகள் குறிவைப்பு மறுக்கிறது இந்தியா

இலங்கையின் கேந்திர நிலைகளை இந்திய ஏவுகணைகள் குறிவைத்துள்ளதாக வெளியான தகவல்களை, நீண்டநாட்கள் கழித்து இந்தியா நிராகரித்துள்ளது. இதுதொடர்பாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தியா நீண்டகால உள்நாட்டு ஏவுகணை அபிவிருத்தித் திட்டத்தைக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம், தற்காப்பு நோக்கத்தைக் கொண்டதேயன்றி, எந்தவொரு நாட்டுக்குழ் எதிரானது அல்ல.

இந்திய ஏவுகணைகள் இலங்கையின் கேந்திர நிலைகளை குறிவைத்துள்ளதாக சில இணையங்களிலும், அச்சு ஊடகங்களிலும் செய்திகள் வெளியானதை

19 ஆம் பக்கம் பார்க்க

# பொறியியல் பீட நிர்மாணம் அணி திரண்டது கிளிநொச்சி







## நற்கருணைப் பெருவிழா

உரும்பிராய் சென்.மைக்கல் தேவாலய வருடாந்த திருவிழா கடந்த 20 ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அருட்தந்தை செலஸ்ரீன் (அ.ம.தி) அடிகளாரின் (அமலோற்பவம், கொழும்புத்துறை) மறையுரையுடன் நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இன்று மாலை நற்கருணைப் பெருவிழா இடம்பெறவிருப்பதுடன், இறுதித்திருநாள் திருப்பலி அருட்தந்தை போல் நட்சத்திரம், அ.ம.தி.சபை வடமாகாண குரு முதல்வர் தலைமையில் நாளை காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட புனித மிக்கேல் சம்மனசானவரின் திருச்சொரூபப் பவனியுடன் நிறைவடையவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வறிய மாணவர்களுக்கு கணினி அறிவைப் புகட்டும் வகையில் வெளிநாட்டு அன்பர்களின் 15 இலட்சம் ரூபா நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட எட்டு கணினித் தொகுதிகளைக் கொண்ட 'வைகறை இல்லம்' என்னும் கணினிப் பயிற்சி மையம் ஒன்று அருட்தந்தை போல்நட்சத்திரம் அடிகளாரினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன் முன்னோடியாக அருட்தந்தை செயற்பட்டு வருகிறார். மேலும் இப்பயிற்சி மையத்தின் போதனாசிரியர்களுக்கு அ.ம.தி. சபையே கொடுப்பனவை வழங்க இருப்பதுடன், வறிய மாணவர்களுக்கு இலவசமாகவே பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இப்பயிற்சி நிலைய கட்டடமானது ஆலயப் பங்குத்தந்தை ஜி.யூட்நிக்ஷன் அடிகளாரின் வழிகாட்டலில் பங்கின் அனேக நலன் விரும்பிகளின் அயராத உழைப்பினால் மிகக் குறுகிய காலத்தில் கட்டடப் பணி நிறைவேற்றப்பட்டுள்ளமை வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியதென பங்கு மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## கருத்தரங்கும் செயலமர்வும்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்பில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நாளை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் தம்பியையா கலாமணி கலந்து கொண்டு நாடகப் பயிற்சியினை வழங்கவுள்ளார்.

இப்பாடத்தை உயர்தர வகுப்பில் கற்பிக்கு் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

## யாழில் மோப்ப நாய்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு நான்கு மோப்ப நாய்கள் நேற்றுக்காலை கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போது யாழ்.குடாநாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக இந்நாய்கள் கொண்டுவரப்பட்டு குற்றச் செயல்களின் சான்றுகளையும், குற்றவாளிகளையும் கண்டுபிடிக்க இந் நாய்களுடன் நான்கு பொறுப்பதிகாரிகளும் வந்துள்ளனர்.

ராக்கி, பெட்கா, சேளி, ஜோய் என்ற பெயர் கொண்ட மோப்ப நாய்களே இவ்வாறு போதைவஸ்துப் பொருட்கள், குற்ற அங்கிப் புலனாய்வு போன்ற விடயங்களில் புலமைவாய்ந்த இந்நாய்கள் குற்றச்செயல்களை மிக விரைவாகக் கண்டுபிடிக்க உதவும் என்று யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(பா, இ)

## சண்டிலிப்பாயில் நடமாடும் சேவை

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் தேசிய அடையாள அட்டை வழங்குவது சம்பந்தமான நடமாடும் சேவை இன்று காலை 9.00 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலார் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், இதுவரை அடையாள அட்டையைப் பெறாதவர்கள் அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள், அடையாள அட்டையைத் திருத்தம் செய்தல் சம்பந்தமான வேலைகள் இடம்பெறும்.

இந்நடமாடும் சேவைக்கு கொழும்பு ஆட்பதிவு திணைக்களத்திலிருந்து திணைக்கள உத்தியோகத்தர்கள் நேரில் இங்கு வந்து அடையாள அட்டைகளை வழங்குவது சம்பந்தமான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

இத்துடன் இந்நடமாடும் சேவையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களும் இங்கு வந்து உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவே இறுதிச் சந்தர்ப்பம் ஆகையால் சம்பந்தப்பட்டவர்கள் இங்கு வந்து தமக்குரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பிரதேச செயலர் தெரிவித்தார். (104)

## வைரவிழாவும் மலர் வெளியீடும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் வைரவிழாவும், மலர் வெளியீடும் இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக ஓய்வுநிலை மூத்த அதிபர் கா.நாகலிங்கம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், அப்புஜி வீதி திறப்பு, நினைவுச் சின்னம் திறப்பு, அதிபர், ஆசிரியர்களைக் கௌரவித்தல் மற்றும் மலர் வெளியீடு என்பன இடம்பெறவுள்ளது.

## கடல் தீர்த்தத் திருவிழா நாளை

(பருத்தித்துறை)

அருள்மிகு வல்லிபுர ஆழ்வார் ஆலய கடற்தீர்த்தத்திருவிழா நாளை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இத் திருவிழாவன்று இரவு ஆலய முன்றலில் தென்னிந்தியக் கலைஞர்களின் இன்னிசை நிகழ்வும், பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

இதில் தென்னிந்தியாவின் பிரபல பாடகி அருணா, பாடகர் ஹரிகரன் ஆகியோர் பக்திப் பாடல்களை வழங்கவுள்ளனர்.

கடந்த 30 வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையால் தீர்த்தத்திருவிழா அன்று இரவு நிகழ்ச்சிகள் நடை பெறாது இருந்த நிலையில் இவ் வருடம் இரவு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆலய மகா சபையின் தலைவர் எஸ். தேவதாஸசன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குரு ஆசியுரை வழங்கவுள்ளார். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் பக்திப் பாடல்கள், சாயி நிலையத்தின் பஜனை மற்றும் பட்டிமன்றம், நாட்டிய நாடகம், நாடகம் போன்ற பல கலை நிகழ்வுகளும இடம்பெறவுள்ளன. (01,116)

## முகமாலையில் மீள்குடியமர்வு

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் முகமாலை கிராம அலுவலர் பிரிவின் 'பொந்தர் குடியிருப்பு' கிராம மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு தற்போது தற்காலிகமாக வசிக்கும் இடங்களிலிருந்து பதிவுகளை நீக்கிய ஆவணங்களுடன் மீள்குடியேற்றத்திற்கு வருகை தருமாறு இக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் என்று கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளாார்.

## பரிசளிப்பு விழா

(காரைநகர்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை காலை 9.00 மணிக்கு கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அ.சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், தீவக வலயக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரெனிஸ்லாஸ் சிறப்பு விருந்தினராகவும், கோண்டாவில் இ.போ.சபையின் உதவி முகாமையாளர் திரு.ஏகாம்பரநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (10)

## விஞ்ஞான தினம்

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் விஞ்ஞான தினம் இன்று காலை 10.00 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் நடை பெறவுள்ளது.

கணித விஞ்ஞான மன்றத் தலைவர் செல்வன் ரமேஸ் நிதர்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி குணரத்தினம் திருக்குமரன் சிறப்பு விருந்தினராகவும், பழைய மாணவர்களான யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் சிவபாக்கியநாதன் கேதீஸ்வரன், வைத்திய கலாநிதி சிவசுப்பிரமணியம் நித்தியரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



3 ஆவது அகவையில்




பெயர் : வி.அபினயம்,

முகவரி: ஜெயபுரம் தெற்கு

## சைவப் புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அதன் செயலாளர் கந்த சத்தியதாசன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் 2012 ஆண்டுக்கான சைவப் புலவர், இளஞ் சைவப் புலவர் பட்டமளிப்பு விழா தொடர்பான கலந்துரையாடல், பொதுக்கூட்டம், புதிய பிரேரணைகள் என்பன இடம்பெறவுள்ளன. எனவே செயற்குழு உறுப்பினர்களைத் தவறாது சமூகம் தரும்படி செயலாளர் கேட்டுள்ளார்.(06)

# சிறந்த சேவை மனப்பாங்கே கௌரவத்துக்கான நிறைவாகும்

### - வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்

(வடமராட்சி)

சோதனை சூழ்ந்து வந்த போதிலும் அதனைச் சாதனை யாக்கி தனது புலமை அறிவு டன் மாணவர்களை வளர்த் தெடுத்தபெருமை ஓய்வு பெற்ற அதிபரான வே.துரைசிங்கத் தையேசாரும் என வடமராட்சி வலயக்கல்விப் பிரதிப் பணிப் பாளர் சி.புஸ்பலிங்கம் தெரி வித்தார்.

பொலிகண்டி இ.த.க.பாட சாலையில் ஓய்வு பெற்ற அதிபர் வே.துரைசிங்கத்துக் கான சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி ச.விக்கினேஸ்வரமூர்த்தி தலை மையில் நடைபெற்றபோது பாராட்டுரையில் அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,

ஓய்வு பெற்ற அதிபர் துரை சிங்கம் தனது சேவையிலும் 16 ஆண்டுகால அதிபர் சேவை யிலும் தனது கடமைகளை திறம்பட ஆற்றியுள்ளார். அவர் தம் சேவையில் தனது பாட சாலையில் கல்வி கற்று வெளி யேறுகின்ற மாணவர்களை நல் வழிப்படுத்துவதில் வல்லவரா கத் திகழ்ந்துள்ளார்.

அந்த வகையில் அவருடைய முகாமைத்துவ செயற்பாடும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியாகின்றது. இவரிடம் ஒழுக்கம், பண்பு, நல்ல புலமை காணப்பட்டதால் இப்பாட சாலையின் புகழை வளர்த்துக் கொள்வதற்கும் பாடசாலை சமூகம் சார்ந்தவர்களும் பலர் உந்துசக்தியாக இருந்துள்ளனர்.

அதிபர் மட்டுமல்ல ஆசிரிய ரின் பங்கு உன்னதமானதாகும். இவ்வாறிருக்க விஞ்ஞான பாடத்துடன் புலமைப்பரிசில் பயிற்சி மற்றும் சித்திரபாடத் தையும் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு தன்னை ஈடு படுத்திக் கொண்டது மட்டு மல்லாது, புலமையை வெளிக் கொண்டுவந்தவர்தான் வே. துரைசிங்கம். இவ்வாறு ஒருவர் செய்யும் சேவையில்தான் அவ ருக்கு வழங்கப்படும் கௌரவம் நிறைவு செய்யப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு பொலிகண்டி கந்தவனம் மற்றும் பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள், வணக்கத்துக்குரிய பிதா அகஸ்டின் அடிகளார், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் இ.இந்திரதாஸ், மாணிக்க வித் தியாலய அதிபர் மற்றும் பெற்றோர் சங்கத்தினர், பாடசாலை பழைய மாணவர் கள் எனப்பலர் கலந்து கொண் டனர். (116)

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்




(வேலணை)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மேற்படி 'core' நிறுவனத்தின் அனுசரணையுடன் 'கிருபா லேனர்ஸ்' நிறுவனத் தால் வேலணை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக் கான சாரதி அனுமதி பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச சபை தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் வேலணைப்பிரதேச அமைப்பாளருமான் சி.சிவராசா, தீவகம் தெற்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீஸன் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த தவிசாளர், இத்திட்டம் சிறந்த பயனைத்தரும் திட்டம் எனவும் தீவகப் பிரதேசம் போது மான போக்குவரத்து வசதிகள் குறைந்த பிரதேசம் எனவும் இத் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு முழுமக்களும் பயனடையக் கூடியதாக செயற்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார். அத்துடன் இவ்வாறான ஏற்பாட்டினைச் செய்ய அனுசரணை வழங்கிய 'core' நிறுவனத்திற்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார் (85)

# சிறுவர் தினத்தன்று விசேட செயற்திட்டம்

(பருத்தித்துறை)

உலக சிறுவர் தினமான எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியன்று சகல பாடசாலைகளிலும் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை கல்வி அமைச்சு நடைமுறைப்படுத் தவுள்ளது.

சிறுவர் உலகம் சிறுவர் களுக்கே என்ற கருப்பொருளை மையாகக் கொண்ட இந்நிகழ் சித்திட்டத்தின் பிரகாரம் எதிர் வரும் முதலாம் திகதியன்று பாடசாலை அரம்பிக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட கருப் பொருளை மையமாகக் கொண்டு உலக சிறுவர் தினத்தின் முக்கியத்துவம் தொடர்பாக சிறுவர்களையும், ஆசிரியர்கையையும் அறிவுறுத் தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை பாடசாலையில் நடைமுறைப் படுத்தவேண்டும் எனவும் இந் நிகழ்ச்சித்திட்டத்தை மேற் கொள்ள பாடசாலைகள் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109, 03)

# குறைவான மழைவீழ்ச்சியே கடும் வறட்சிக்கு காரணம்

### - வளிமண்டலவியல் அவதானிப்பாளர் -

(கிரு-சிகரம்)

2011 ஆம் ஆண்டுடன் ஒப் பிடுகையில் 2012 இல் மூன்றில் ஒரு பகுதி மழைவீழ்ச்சியே யாழ்.மாவட்டத்தில் பதிவாகி யுள்ளதாகவும் இதுவே தற் போது நிலவும் கடும் வறட் சிக்கு காரணம் எனவும் யாழ். வளி மண்டலவியல் அவதானிப் பாளர் குறிப்பிட்டார்.

2011 ஆரம்பம் முதல் செப் டெம்பர் வரை 356.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகி யிருந்தது. ஆனால், 2012 ஆரம் பம் முதல் இன்று வரை மொத் தமாக 101.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியே கிடைக்கப்பெற்று ள்ளதாகவும் யாழ்.மாவட்ட வளிமண்டலவியல் அவதானிப் பாளர் த.பிரதீபன் சுட்டிக்காட் டியுள்ளார்.

இந்த வாரத்தில் மட்டும் செப்டெம்பர் 21 ஆம் திகதி 0.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், 24 ஆம் திகதி 1.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள் ளதாகவும் குறிப்பிட்ட அவர், ஒக்டோபர் முதல் பெரும்போக நெற்செய்கை ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒக்டோபர் மாத மளவில் மழை ஏற்படுவதற் கான சூழல் அதிகம் காணப் படுவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், யாழ்ப்பாணத் தைப் பொறுத்தவரையில் சரா சரியாக 33 பாகை செல்சியஸ் வெப்பநிலை காணப்படுவதா கவும், ஆனால், கடந்த வாரத் தில் அதிகூடிய வெப்பநிலை யாக 34.4 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ள தாகவும் கூறிய யாழ்.மாவட்ட வளிமண்டலவியல் அவதா னிப்பாளர், இவ்வாறு வெப்ப நிலை அதிகரித்துக் காணப்படு கின்றமையினால் தாக்கம் எது வும் ஏற்படாது எனவும் கூறி யுள்ளார்.

# நல்லொழுக்க நிறுவனத்தின் கொடிவார நிகழ்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் கொடிவார தினம் எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு வட மராட்சி பிரதேச செயலர் எதிர் வரும் 3 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் வைத்து கொடி வாரத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேலும் நல்லொழுக்க நிறு வனத்தினால் வடமராட்சியில் உள்ள சகல பாடசாலைகளுக் கும் கொடிகள் வழங்கப்படவுள் ளது. அத்துடன் இங்கு 7 பாடசாலைகளில் விழிப்புணர் வுக் கருத்தரங்குகளும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் மது, புகைத்தல், போதைப்பொருள் அற்ற சமூகத்தை உருவாக் குதல் என்னும் தலைப்பில் யாழ்.மாவட்ட மதுவரி அத் தியட்சகர் நா.சோதிநாதன் சிறுவர் துஷ்பிரயோகத்தை முற்றாக ஒழிப்போம் என்னும் விடயம் பற்றி வடமராட்சி ஆசி ரிய நிலையப் பொறுப்பாளர் செல்வி இராஜேஸ்வரி சுப்பிர மணியக் குருக்கள் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (109)



உடுப்பிட்டி - கட்டைபுளியடி பகுதியில் அமைந்துள்ள தனியார் வாணிப நிலையத்தின் பெயர் பலகை இது. இதில் பல் பொருள் என்பதற்காக 'பல்பெருள்' என்று தமிழ் கொலை செய்யப்பட்டு எழுதப்பட்டிருப்பது கவலை தரும் விடயமாகும். (116)

# விஞ்ஞான வினாவிடைப் போட்டி; வலயமட்டத்திலான முடிவுகள்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கிடை யில் நடைபெற்ற வலய மட்ட விஞ்ஞான வினா விடைப் போட்டி முடிவுகள் யாழ்.வலய விஞ் ஞானக் கல்விப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள் ளதுடன் . இவ்வலய மட்டப் போட்டிகளில் வெற் றியீட்டிய மாணவர்களுக்கான மாகாணமட்டப் போட்டிகள் ஒக்டோபர் மாதம் இரண்டாம் வாரத் தில் நடைபெறும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

வலய மட்டப் போட்டிகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் தோற்றி வெற்றி பெற் றோர் பெயர் விபரம் வருமாறு,

தமிழ் மொழி மூலம் தோற்றி வெற்றி யீட்டியோர்.

தரம் 06

கி.ஜஜலக்சி (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை), து.வைஸ்ணவி (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை), ஆ.சண்முகப்பிரியா (யா/ வேம்படி மகளிர் உயர் பாடசாலை).

தரம் 07

ஜே.கிருசிகன் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ரி.பிரியாங்கன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.சுபீதா (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை).

தரம் 08

எ.அன்புச்செல்வன் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), வி.விமலினி (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை), ற.வர்சிகா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி).

தரம் 09

சி.சிவானுஜா (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை), மோ.சாருஜா (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை), த.லோசிகா (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை).

தரம் 10

க.தமிழினி (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை), கே.கஜலக்சி (யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலை), றா.லக்சிகா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி).

தரம் 11

ச.அனோஜா (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ச.விதுலா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பி.பாலகிருஸ்ணன் (யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி). (தொடரும்.....) (03)

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள் - மகாத்மா காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## மற்றவர்களையும் சிந்திக்கும் பழக்கம்!

அவன் நாலெழுத்துப் படித்தவன் என்று யாரைச் சொல்கிறோம்? தமிழில் அ,ஆ,இ,ஈ என்று படித்தவர்களையா அல்லது ஆங்கில மோகத்தில் ஏ,பி,சி,டி என்று படித்தவர்களைச் சொல்கிறோமா? உண்மையில் நாலெழுத்துப் படித்தவர்கள் என்று நாம் சொல்வது மனிதன் என்ற நான்கு எழுத்துக்களைப் படித்தவர்களைத்தான்.

நம்மைச் சுற்றியுள்ள இந்த பிரபஞ்சம் இன்னும் நாம் அறியவொண்ணாத எத்தனையோ ரகசியங்களைத் தன்னுள் கொண்டிருப்பது. அறிவியலும், பொறியியலும், அருளியலும், பொருளியலும் அங்கே நிறைந்திருக்கிறது. ஏடுகளுக்கு அப்பாலும் சென்று நாம் எவ்வளவோ தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இயற்கையைக் கற்று அதனிடமிருந்தும் பெற்றுக்கொண்ட வளத்தையும் அறிவையும் பயன்படுத்தி மனிதன் உருவாக்கிய செயற்கையும் சேர்ந்து அழகுக்கு அழகு சேர்க்கிறது. ஓர் ஆழ்கடலின் ஒரு துளியாவது கற்று மகிழவும், மகிழ்ந்து வாழவும் தேவையான கல்விச் சூழலையே மாணவர்கள் அவாவுகிறார்கள்.

கிளிநொச்சியில் அமைக்கப்படும் பல்கலைக்கழகத்தின் விவசாய பொறியியல் பீடங்களுக்கான வளாகப் பிரதேசத்தைச் சுத்தப்படுத்த நேற்றைய தினம் அங்கு குழுமிய மாணவர்கள் இதை உறுதிப்படுத்தினர். பரந்த பிரதேசத்தில் அமையும் இந்த விசாலமான கற்றல் சூழலை அழகுப்படுத்தி, இது எங்களுக்கான வரப்பிரசாதம் என்ற உணர்வோடு மாணவர்களுடன் பெற்றோரும் ஆசிரியர்களும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளும் எதிர்கால தமிழச்சமூகத்தின் கல்வியில் அக்கறை கொண்ட பேராளர்களுமாக அங்கு திரண்டிருந்தனர்.

கல்விக்கு சூழலும் முக்கியம். அமைதியான அழகான சூழலிலேயே கற்பதையும் அனுபவித்து மகிழ்வோடு செய்யமுடியும். அதை நம் சமூகம் உணர்ந்துகொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. மகிழ்வோடும் ஈடுபாட்டுடனும் செய்யப்படும் செயல்களே வெல்லும் என்பதைக் குறிக்க பல உதாரணங்களைச் சொல்லமுடியும்.

காட்டுப் பகுதி ஒன்றில் பொலிஸ் அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடும் போட்டி நடந்து கொண்டிருந்தது. அவர்களில் ஒருவர் கூடச் சரியாகச் சுடவில்லை. இதைக் கவனித்துக் கொண்டிருந்த மேலதிகாரி, அந்த வழியாக வந்த பழைய வேட்டைக்காரர் ஒருவரை அழைத்து சுடுமாறு வேண்டினார். அவரும் துப்பாக்கியை வாங்கி, கொஞ்சம் கூட யோசிக்காமல் படபடவென்று இலக்கினைச் சரியாக சுட்டார்.

பயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆச்சரியம். "அவருக்கு சுடுவது மட்டும் தான் நோக்கம். அதை அனுபவித்து மகிழ்ந்து செய்தார். ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது போட்டியில் வெற்றி பெற்று விட வேண்டும், வென்றால் பதவி உயர்வு என்ற பலனை எண்ணி, சுடுவதில் கோட்டை விட்டு விட்டீர்கள்" என்றார் மேலதிகாரி.

படிப்பதையும் நாம் இவ்வாறு பொருளாதாரப் பயன் ஒன்றையே கருதி தலையைப் புத்தகங்களுக்குள் கவிழ்த்துச் செய்து கொண்டிருப்பதால்தான் சமூக உணர்வற்ற, சகமனிதர்களது அவதிகளை தேவைகளை நேயஉணர்வுடன் பார்க்கத் தெரியாத தன்முனைப்புக்காரர்களாக நம் இளையோர் வளர்கிறார்கள். மகிழ்ந்து படிப்பதை விட்டு விட்டு 'இதைப் படித்தால் இது கிடைக்கும், அதைப் படித்தால் அது கிடைக்கும்' என்று பலனை மட்டும் எண்ணிப் படிப்பதால்தான் படிப்பு பலருக்கு பாவற்காய் என்றும் ஆகிவிடுகிறது.

கல்வி என்பது உனக்கு எவ்வளவு தெரியும் என்பதல்ல; தெரிந்ததையும் தெரியாததையும் வேறுபடுத்தும் திறமையே அது. மற்றவர்களுக்காகவும் சிந்திப்பதற்கான மனப்பழக்கத்தை உனக்கு ஏற்படுத்தித் தருவதே அது! - ஆசிரியர்

# பருவமழை ஆரம்பம்; விவசாயச் செய்கை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

பருவமழை பெய்ய ஆரம்பித்ததை அடுத்து விவசாயிகள் தமது காலபோகச் செய்கையில் தீவிரமாக இறங்கியுள்ளார்கள். கடந்த சில மாதங்களாக குடாநாட்டு மக்கள் கடும் வறட்சியை எதிர்கொண்டுள்ள நிலையில், தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்திருப்பதானது இங்குள்ள விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சரியான மழைவீழ்ச்சியின்மையால் தமது விவசாய நடவடிக்கையை தொடரமுடியாதிருந்த விவசாயிகள், தற்போது மிகவும் சுறுசுறுப்புடன் தமது பணிகளை ஆரம்பித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக கடந்த ஒரு வருடமாக மழைவீழ்ச்சி இல்லாத காரணத்தால் தீவுப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அன்றாட நீர்த்தேவைக்கு நீர் இன்றி பெரும் அவதியுற்ற நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நெல் விதைத்தல், மிளகாய் பயிரிடல், மரக்கறி பயிரிடல் மற்றும் வர்த்தகப்பயிரான புகையிலை போன்ற பயிர்களை பயிர் செய்வதில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அத்தோடு வடமராட்சி பொலிகண்டியில் உள்ள விவசாயிகள் ஏனைய விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக புகையிலை நாற்றிலிருந்து புகையிலை கன்றை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். குறிப்பாக பொலிகண்டி கந்தவளக் கடவை ஆலயச் சூழலிலேயே இந்த புகையிலைக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பகுதி ஒரு கடற்கரையோரப்பகுதியாகும் கடற்கரையோரத்தில் உப்புக்காற்றில் வளரும் இந்தக் கன்றுகள் ஆரோக்கியத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கிருந்தே யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு புகையிலைக் கன்றுகள் எடுத்துச்செல்லப்படுகின்றன.

இதேபோன்று யாழ்ப்பாணம், திருநெல்வேலி போன்ற இடங்களில் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் விவசாய செய்கையை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

## நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்த அணிதிரள வேண்டும்

(கொழும்பு)

நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்த மக்கள் அணி திரள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டில் நீதிமன்றக் கட்டமைப்பின்மீது அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தும் காலமிது. நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான அழுத்தம் குறிதது நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எல்லோரும் எதிர்பார்க்கும் நீதியான ஓர் சமூகக் கட்டமைப்பை உருவாக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் நியாயத்தை வேண்டி நீதிமன்றின் உதவியை நாடவேண்டியுள்ளது. இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் பொதுப் பணத்தை கொள்ளையிடுகின்றனர். நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கின்றனர். நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்ய அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். நாத்தான்டிய பிரதேச புனித அந்தோனியார் தேவாலயமொன்றுக்கு நன்கொடை வழங்கிய சந்தர்ப்பத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## வலயமட்ட விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பயிற்சி

(அச்சுவேலி)

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலய மட்ட விஞ்ஞான வினா - விடைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு யாழ்ப்பாண வலய விஞ்ஞானப் பிரிவினால் ஒருநாள் பயிற்சி வகுப்பு இன்று காலை 08.30 தொடக்கம் பிற்பகல் 02.00 மணி வரை வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களை மாகாண மட்டப் போட்டிகளுக்காக தயார்ப்படுத்தும் வகையில் இவ் ஒருநாள் பயிற்சி வகுப்பினை நடத்துவதற்கு விஞ்ஞானப் பிரிவினரால் திட்டமிடப்பட்டுள்ளதால் இன்றைய தினம் பொருத்தமான பொறுப்பாசிரியர் ஒருவருடன் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை தவறாது கலந்து கொள்ள அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மேலும் மாகாண மட்டப் போட்டிகள் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெறும் எனவும் இது தொடர்பான விபரங்கள் பாடசாலைகளுக்கு பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## பக்திப் பாடல் இறுவட்டு வெளியீடு

(வவுனியா)

வவுனியா - கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீதேவி சமேத ஸ்ரீ மகாவிஷ்ணு தேவஸ்தான முதலாவது பிரம்மோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு இவ் ஆலயத்தின் சிறப்புக்கள் அடங்கிய் பக்திப் பாடல் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. பண்டிதர் சைவப் புலவர் பொன். சுகந்தனினால் இயற்றி பாடப்பட்ட இவ் இறுவட்டின் வெளியீட்டு நிகழ்வு சொல்வேந்தன் செ. ஸ்ரீநிவாஸனின் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கான ஆசியுரையை உற்சவ பிரதமகுரு தேவஸ்தான பிரதம குருமணி வேதாகம பூஷணம் ஈசான தீட்சிகர் சிவஸ்ரீ முத்து இரத்தின வைத்தியநாதக்குருக்களும் வாழ்த்துரையை சர்வசாதகர் செஞ்சொற் செல்வன் சிவஸ்ரீ ந. பிரபாகரக்குருக்களும் வழங்கினர். இறுவட்டை ஆலய அறங்காவலர் சுந்தரம் ஐயா வெளியிட்டுவைக்க முன்னாள் வவுனியா நகர பிதா ஜி.ரி.லிங்கநாதன் பெற்றுக் கொண்டார். (160)

## குறைந்த முத்திரைக் கட்டணம்; இன்று இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் ஆகக்குறைந்த முத்திரைக் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் இன்று வெள்ளிக்கிழமை தீர்மானிக்கவுள்ளதாக தபால் திணைகளம் குறிப்பிடுகின்றது.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு இன்று கூடி இது தொடர்பிலான தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக பிரதித் தபால் மாஅதிபர் ஆர்.டி.பி.காமினி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தபால் திணைக்களத்திற்கு சாதாரண கடிதமொன்றுக்கு 17 ரூபாவும் வர்த்தக கடிதமொன்றுக்கு 7 ரூபாவும் நட்டம் ஏற்படுகிறது.

சாதாரண கடிதமொன்றுக்கு 22 ரூபாவை தபால் திணைக்களம் செலவிடுகின்ற போதிலும் தற்போது அந்தக் கடிதத்தை அனுப்புவதற்கு 5 ரூபா முத்திரையே பயன்படுத்தப்படுகின்றது.

வர்த்தக கடிதமொன்றுக்கு 22 ரூபா செலவிடப்படுகின்ற போதிலும் தற்போது 15 ரூபாவிற்கே அந்தக் கடிதங்கள் அனுப்பப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிறைவு நாள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்க ஓராண்டு நிறைவு நாளும், சிறப்பு நிகழ்வுகளும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கப் பிரதிநிதிகள் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசிய மேலாண்மைக்கு எதிராகவே முஸ்லிம் தேசியம் எழுச்சியடைந்தது

அரசு என்பது வன்முறை நிறுவனம்தான். தனது அதிகாரத்துக்கு எதிரான சாத்வீகப் போராட்டங்களையே அது ஒரு எல்லைக்குமேல் அனுமதிக்காது. வன்முறைப் போராட்டத்தை அது மூர்க்கமான வன்முறையினாலேயே எதிர்கொள்கிறது. வன்முறை வன்முறையையே தூண்டுகிறது. இது நச்சுவட்டச் சுழல்தான். அரசுக்கு எதிரான இளைஞர்களின் ஒவ்வொரு தாக்குதலும் அரசின் மிகமோசமான எதிர்த்தாக்குதலை எதிர்கொண்டது. அரசின் ஒவ்வொரு தாக்குதலும் நூற்றுக்கணக்கான இளைஞர்களை ஆயுதப் போராட்டப் பாதையில் தள்ளியது இவ்விதமாகத்தான்.

தமிழ்த் தேசியம்தான் இந்த இளைஞர் இயக்கங்களின் கொள்கை எனலாம். தன் இனப்பற்றும் பிற இன வெறுப்பும் இனத் தேசியவாதத்தின் உள்ளார்ந்த அம்சங்கள். தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் எல்லாவற்றினதும் அடிப்படையான கருத்துநிலை இதுதான். இதற்கு மேலாக மார்க்சியக் கொள்கையில் ஆரம்பத்தில் சில இயக்கங்கள் ஆர்வம் காட்டின. இது சில தனிப்பட்டவர்களின் விருப்பார்வமாக இருந்ததே தவிர, இயக்க உறுப்பினர்கள் எல்லோரும் இவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்டதாகச் சொல்ல முடியாது. தனிநாடுதான் அவர்களது கனவாக இருந்தது. தனிநாடு கிடைத்தால் தாங்கள் சுயாதீனமாக முன்னேறலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

தொடக்க காலத்தில் மலையகத் தமிழர்கள் மற்றும் இஸ்லாமியத் தமிழர்களும் இந்த இயக்கங்களில் போராளிகளாக இணைந்திருந்தனர். ஆனால் அது பெரிய எண்ணிக்கையில் இல்லை என்று நினைக்கிறேன். தமிழ் பேசும் ஏனைய சிறுபான்மை இனங்களின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு பொதுவான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அவர்களை ஒன்றிணைத்து விடுதலைப் போராட்டத்தை மக்கள் இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல விடுதலை இயக்கங்கள் தவறிவிட்டன. இராணுவவாதம் அவற்றுள் மேலோங்கி இருந்தது. இன சமத்துவக் கோட்பாட்டுக்குப் பதிலாக இன மேலாண்மை அவற்றின் அடிப்படைக் கருத்துநிலையாக இருந்தது. மலையகத் தமிழர், இஸ்லாமியர் ஆகியோரின் வேறுபட்ட அரசியல் பொருளாதார நலன்கள், அபிலாசைகள் பற்றிய புரிந்துணர்வு அவர்களுக்கு இருக்கவில்லை. அதனால் மலையகத் தமிழர்களும் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துள் உள் வாங்கப்படவில்லை. குறிப்பாக முஸ்லிம்களைப் பொறுத்தவரை விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளால் சந்தேகமும் முரண்பாடுகளும் மோதல்களும் அதிகரித்தனவே த்விர, ஒன்றிணைந்து போராடுவதற்கான வாய்ப்பே இருக்கவில்லை.

**இன மோதல் வரலாற்றுக் காலம் தொட்டு இருப்பதாகக் கூறுவது தவறு. எல்லாளனுக்கும் துட்டகாமினிக்கும் இடையிலான மோதல் இன அடிப்படையிலான மோதல் என்று சொல்ல முடியாது. அது அரச பரம்பரை, ஆட்சியதிகாரம் தொடர்பானது. இன்றைய இன முரண்பாட்டுடன் அதைத் தொடர்புபடுத்தக் கூடாது. இன்று நாம் பேசும் இனத்துவம், இன அடையாளம், இன முரண்பாடு என்னும் கருத்துகள் நம் காலத்துக்கே உரியவை. பல வரலாற்றாசிரியர்கள் பலர் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.**

மலையகத் தமிழர்கள் பரந்த அர்த்தத்தில் தமிழர் என்ற அடையாளத்துக்குள் வருவார்கள். என்றாலும் தமிழ்ஈழம் என்னும் கோரிக்கையின் புவியியல் எல்லைக்கு அப்பால் மத்திய இலங்கையில் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் அவர்கள். தமிழ்ஈழம் புவியியல்ரீதியில் அவர்களை உள்ளடக்காது. ஆனால் இலங்கை முஸ்லிம்கள் அப்படியல்ல. நான் ஏற்கனவே கூறியபடி அவர்கள் மொழியை அன்றி மதத்தையே தம் இனத்துவ அடையாளச் சின்னமாக ஏற்றுக்கொண்டவர்கள். அதனால் அவர்கள் தம்மைத் தமிழர் என்று அடையாளப்படுத்திக்கொள்ளவில்லை. அதேவேளை மொத்த இலங்கை முஸ்லிம்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினரான வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் தமிழ்ஈழ எல்லைக்குள் வாழ்பவர்கள். அவ்வகையில் தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை முஸ்லிம்களைப் புவியியல்ரீதியில் கூறுபடுத்தி இரண்டு தேசங்களில் இரண்டு பெரும்பான்மை மேலாண்மை ஆட்சியின்கீழ் பலமற்ற சிறுபான்மையினராக மாற்றிவிடும் என்று அவர்கள் பயந்தார்கள். 1985இற்குப் பின்னர் வெளிப்பட்ட தமிழ்ஈழ விடுதலை இயக்கங்களின் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் அவர்களின் அச்சத்தையும் பாதுகாப்பின்மை உணர்வையும் ஆழப்படுத்தின. கப்பம் கேட்டல், வாகனங்களைப் பறித்தல், ஆட்கடத்தல், கொலைசெய்தல் என்பன இஸ்லாமியர் மத்தியில் எதிர்ப்புணர்வையும் ஏற்படுத்தின. கிழக்கில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிளவுபடுத்தி ஈழப்போராட்டத்தில் பின்னடைவை ஏற்படுத்த அரசாங்கமும் ஆயுதப்படைகளும் இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தின. 1990ஆம் ஆண்டு இந்த முரண்பாட்டின் உச்சம் எனலாம். பல நூற்றாண்டுகளாக வடக்கையே தம் தாயகமாகக் கொண்டிருந்த எழுபதினாயிரத்துக்கு அதிகமான முஸ்லிம்கள் அனைவரும் உடுத்த உடையுடன் புலிகளால் அகதிகளாக வெளியேற்றப்பட்டனர். இதே காலப்பகுதியில் கிழக்கிலங்கையில் மட்டும் ஆயிரத்துக்கு அதிகமான முஸ்லிம்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டது, போராளிகளைக் காட்டிக்கொடுத்தது, இராணுவத்துடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவல் படை தமிழர்களைக் கொன்றது என்றெல்லாம் காரணங்கள் கூறப்பட்டன. அப்படியாயின் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டித்திருக்க வேண்டும். வடக்கிலிருந்து முஸ்லிம்களை முற்றாக வெளியேற்றியதையும் பல ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம்களைப் படு கொலை செய்ததையும் எப்படி நியாயப்படுத்துவது? இலங்கை இராணுவம் தமிழர்களைக் கொன்றதை இனப்படுகொலை, இனச் சுத்தி கரிப்பு எனக் கூறலாம் என்றால் புலிகளின் செயற்பாட்டையும் அவ்வாறு சொல்வதில் தவறு இல்லை. இன மேலாண்மையும் இன முரண்பாடும்தான் இப்படுகொலைகளுக்குக் காரணங்கள். முஸ்லிம்களைப் பொறுத்த வரை பொன்னம்பலம் இராமநாதனின் நிலைப்பாட்டைத்தான் புலிகளும் கொண்டிருந்தனர். அதாவது அவர்கள் மதத்தால் முஸ்லிம்களாய் இருந்தாலும், இனத்தால் தமிழர்கள்தான். ஆனால் இதை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்ஈழத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்த் தேசிய மேலாண்மைக்கு எதிராக இக்காலப்பகுதியில் முஸ்லிம் தேசியம் தீவிரத்துடன் எழுச்சியடைந்தது. இதன் விளைவாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கென்று தனி அரசியல் இயக்கமாக உருவாகியது. தமக்கு எதிராக எந்தச் சக்தியும் வளர்வதை விரும்பாத புலிகள், முஸ்லிம்களின் இருப்பை வன்முறைமூலம் துடைத்தெறிய முயன்றதன் வெளிப்பாடாகவே இந்த வெளியேற்றத்தையும் படுகொலைகளையும் கருத வேண்டும்.

**சமகால இலங்கைத் தமிழ் இலக்கியம் பெரும்பாலும் அடையாள அரசியலின் வெளிப்பாடாகவே உள்ளது எனலாம். மூன்று வேறுபட்ட இனக் குழுமத்தினர் தமிழ் என்னும் ஒரே மொழியைப் பகிர்ந்துகொண்டு தங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை, தங்களது பார்வைகளை இலக்கியத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இத்தன்மையைப் போர்க்கால இலக்கியங்களிலும் காண முடியும். உதாரணமாக 1984இல் வெளிவந்த "மரணத்துள் வாழ்வோம்" கவிதைத் தொகுப்பை எடுத்துக்கொள்ளலாம். அதில் பெரும்பாலும் யாழ்ப்பாணப் படைப்பாளிகளின் பங்களிப்புத் தான் அதிகம் இருக்கும். யாழ்ப்பாணத் தமிழர்மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஒடுக்குமுறையின் பதிவுகள் அதில் பெரிதும் இடம்பெற்றிருக்கும். பின்னர் 2000 ஆண்டில் கிழக்கிலிருந்து "மீசான் கட்டைகளில் மீள எழும் பாடல்கள்" என்னும் தொகுதி வெளிவந்தது. இதில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கவிதைகள் முஸ்லிம் படைப்பாளிகளால் எழுதப்பட்டவை. அவை அனைத்தும் விடுதலை இயக்கங்கள் முஸ்லிம் மக்கள்மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளைப் பதிவுசெய்தவை.**

**- கலாநிதி எம்.ஏ.நுஃமானின் காலச்சுவடு நேர்காணலிலிருந்து**

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பல்வேறு தொழிற்சங்க இயக்கங்களுள் வலுவாகப் பிணைக்கப் பட்டிருந்தனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்தான் அவர்களது பெரிய தொழிற்சங்கமாகவும் அரசியல் கட்சியாகவும் செயற்பட்டது. அதன் தலைவர் தொண்டமான் பலம் மிக்க அரசியல் தலைவராக விளங்கினார். சிங்கள ஆளும் கட்சிகளுடன் இணங்கிச் செயற்பட்டார். தமிழர் பிரச்சினையில் சில சமர சங்களுக்கும் முயன்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் இணைந்தார். ஆயினும் அக்கூட்டு நீடிக்கவில்லை. தமிழ் ஈழக் கோரிக்கை மலையகத்தை உள்ளடக்கவில்லை. அதை உள்ளடக்குவதும் சாத்தியமல்ல. அது அவர்களுடைய கோரிக்கையும் அல்ல. இந்த நிலைப்பாடுதான் இஸ்லாமியர் மத்தியிலும் இருந்தது. ஆயினும் தமிழ் ஈழக் கோரிக்கையால் அவர்கள் இரு சாராருமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள்.

**தமிழ்நாட்டில் இருப்பவர்களிடமும் புலம்பெயர்ந்த தமிழர் மத்தியிலும் ஒரு ஒற்றைப் பார்வைதான் இருக்கிறது. ஆனால் இலங்கையில் யதார்த்தம் வேறு மாதிரியாக இருக்கிறது. தனி ஈழம் அல்லது தமிழ் ஈழம் என்பது தமிழ் பேசும் எல்லா மக்களுக்குமானதல்ல. அது அடிப்படையில் யாழ்ப்பாண மையச் சிந்தனையின் வெளிப்பாடுதான்.**



# 13442 ரூபா சம்பள உயர்வு கோரி அரச ஊழியர்கள் விரைவில் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு 13,442 ரூபா சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் தவறினால் விரைவில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்க வுள்ளதாக ஜே.வி.பி. சார்பான, தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி. லால்காந்த, செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையில், தமது தொழிற்சங்க ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்கு பொலிஸாரைப் பயன்படுத்த அரசாங்கம் முயற்சித்தால் பதில் கொடுக்குமாறு ஆர்ப்பாட்டக்காரர்களைத் தமது சங்கம் கோரும் எனத் தெரிவித்தார்.


ஏனெனில் இந்தப் போராட்டம் நியாயமானது என அவர் கூறினார்.

உண்மையான தொழிற்சங்கப் போராட்டம் வெற்றியளிக்கும் என நாம் நம்புகிறோம். அரசாங்க அடக்குமுறைக்குப் பயந்து வாபஸ்பெறுவது அறிவார்ந்த நடவடிக்கை அல்ல. ஏனெனில், அதிகாரத்திலுள்ள ஒவ்வொரு அரசாங்கமும் இதை செய்யமுயற்சிக்கிறது. அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழும் வகையில் தொழிற்சங்கங்கள் தமது பலத்தை வலுப்படுத்த வேண்டும் என அவர் கூறினார்.

2006 ஆம் ஆண்டின் பின்னர் தொழிலாளர்களுக்கு அரசாங்கம், 7069 ரூபாவையே படியாக அதிகரித்துள்ளது. 2006 ஆம் ஆண்டில் ஒரு குடும்பம் குறைந்தபட்சம் 25,344 ரூபாவை செலவிட்டது. வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணின்படி, கடந்த மாதம், குடும்பமொன்றுக்கான செலவு 46,396 ரூபாவாக அதிகரித்தது.

எனவே தொழிலாளிகளின் அடிப்படை சம்பளத்திற்கும், வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவுபடி வழங்கப்படாததன் நிலுவைக்கும் இடையிலான இடை வெளியை நிவர்த்திப்பதற்காக 13,442 ரூபாவை அரசாங்கம் வழங்க வேண்டும் என லால்காந்த கூறினார்.

## போலி டொலர்



(கொழும்பு)

தலங்கம ஜயந்திபுர பிரதேசத்தில் போலி டொலர்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 300 அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பொலிஸ் உத்தியோகத்தர்களினால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலங்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## பல்கலை விரிவுரையாளர்களின்றி புள்ளியிடப்பட்டால் தரம் குறைவடையலாம்

(கொழும்பு)

பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளவாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களின்றி உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் வேலை அடுத்த வாரம் தொடங்குமாயின் விடைத்தாள் புள்ளியிடுதலின் தரம் குறைவாக இருக்குமென ஆசிரியர் சங்கங்கள் இன்று எச்சரித்துள்ளன.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் தொடரினும் க.பொ.த. உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் வேலை ஒக்டோபர் முதலாம் திகதி தொடங்கும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார அண்மையில் தெரிவித்திருந்தார்.

வழமையாக க.பொ.த. உயர்தர விடைத்தாள் புள்ளியிடு தலை ஆசிரியர்கள் செய்வர். இதன்போது, குழுக்களின் மேற்பார்வையாளர்களாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடமை புரிவர், இது புள்ளியிடுதலில் உயர்தரம், நம்பிக்கை, நேர்மை என்பவற்றை உறுதி செய்வதற்கான ஏற்பாடாகும்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் புள்ளியிடுதல் தொடர்பான கூட்டத்திற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் 400 பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்திருந்த போதிலும் 16 பேர் மட்டும்தான் பங்குபற்றினர்.

இவர்களில் பெரும்பான்மையானோர் இளைப்பாறியவர்களாவர் என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் உண்மையாகவே உயர்தர விடைத்தாள் புள்ளியிடுதல் தொடர்பாக அக்கறை கொண்டிருக்குமானால் எமது கோரிக்கைகள் தொடர்பில் தீர்வை வழங்க வேண்டும்.

அதன் பின்னரே நாம் வேலைக்குச் செல்லக்கூடியதாக இருக்கும். ஆனால் இந்தப் பிரச்சினை குறித்து மேலும் பேசுவதற்குக்கூட எமக்கு நேரம் வழங்கப்படவில்லை என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி கூறினார்.

## பயங்கரவாதத்தை இல்லாது ஒழிக்க சர்வதேச நடவடிக்கை அவசியம்

(கொழும்பு)



பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி எயர் சீப் மார்ஷல் ரொசான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க, சர்வதேச ரீதியில் கடந்த காலங்களை விடவும் செயற்திறனான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக சட்டக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாத இல்லாதொழிப்பு தொடர்பில் அண்மையில் கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சினால் இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் படையதிகாரிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## சிங்கள மக்களின் ஆதரவு ஐ.தே.க. வுக்கு குறையவில்லை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிங்கள மக்களின் ஆதரவு குறைவடையவில்லை அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலின் மூலம் இது நிரூபிக் கப்பட்டுள்ளது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை விடவும் அண்மையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் வாக்காளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் 28 வீதமான வாக்காளர்களே கட்சிக்கு ஆதரவளித்திருந்தனர், தற்போது அந்த எண்ணிக்கை 39 ஆக உயர்வடைந்துள்ளது.

தேர்தல் மோசடி மற்றும் பாரியளவிலான கூட்டணிகளுடன் தேர்தல் களத்தில் இறங்குவதன் காரணமாகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தல்களில் பாரிய வித்தியாசத்தில் வெற்றியீட்டி வருகின்றது என்றார்.

## பயணத்தடை தீர்மானம் இல்லை



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம், தமிழ்நாட்டுக்கு எதிராக விதித்திருந்த பயணத் தடையை நீக்குவது தொடர்பில் இன்னும் எந்த தீர்மானத்துக்கும் வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளியுறவுத் துறை அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தடை விதிக்கப்பட்டதில் இருந்து, இதுவரையில் தமிழகத்தில் இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் சூழ்நிலை குறித்து அவதானித்து வருகின்றது.

இதனை நீக்குமாறு தமிழகத்தில் பல்வேறு தரப்பிடம் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் தமிழக வர்த்தக பிரதிநிதிகளும் இலங்கை வந்து இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர்.

எவ்வாறாயினும், இதனை நீக்குவது தொடர்பில் இன்னும் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இது தொடர்பில் முழுமையாக பரிசீலிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கூடங்குளம் மின்நிலையம் குறித்து இந்தியாவுடன் பேசப்படும்

(கொழும்பு)

கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. விரைவில் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவொன்று இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளது.

அணு உலையின் பாதுகாப்பு தொடர்பில் இந்த சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட உள்ளது. இதேவேளை, கூடங்குளம் அணு மின் நிலையம் மிகவும் பாதுகாப்பானது என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## டெங்கு நோயாளர்களின் தகவல் குறுஞ்செய்தி மூலம் பரிமாற்றம்



வைத்தியசாலையில் இருக்கும் டெங்கு நோயாளர்கள் தொடர்பான தகவல்களை குறுந்தகவல் மூலம் குறித்த பகுதியின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு தெரியப்படுத்தும் முறையொன்று மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக டெங்கு நோயாளர்கள் தொடர்பான தகவல்கள் தாமதமின்றி பெற்றுக்கொள்ளப்பட்டு நோய் பரவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென திணைக்களத்தின் பணிப்பாளர் அமல் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலையின் வைத்தியரால் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நோயாளர் தொடர்பிலான தகவல்கள் குறுந்தகவல் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

நர்கொழும்பு பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைமுறை வெற்றியளித்ததால் அதனை ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்க தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டார்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுகாதார சேவைகளை இலகுவான முறையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்தகாலங்களில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களை பூர்த்தி செய்து நோயாளர்கள் தொடர்பான தகவல்கள் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# முகமாலையில் மீள் குடியேற்றம்; ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு



(முகமாலை)

கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட முகமாலை பிரதேசத்தின் பொந்தர் குடியிருப்பு பிரதேசத்தின் மீள்குடியேற்றமானது எதிர்வரும் 1ஆம் திகதி மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான முன் ஏற்பாடுகளை ஆராயும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் காலை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

பொந்தர் குடியிருப்பைச் சேர்ந்த அறுபது வரையான குடும்பங்களை எதிர்வரும் முதலாம் திகதி அந்தப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாகவும், அவர்களுக்குத் தேவையான முதற்கட்ட அடிப்படை வசதிகளான தற்காலிகவீடு, குடிநீர் உள்ளிட்ட பொது வசதிகளை ஏற்படுத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதோடு, முகமாலையின் ஏனைய பிரதேசங்களான வேம்பொடுகேணி, இத்தாவில்மேற்கு, முகமாலை தெற்கு, அம்பலவளை போன்ற பிரதேசங்களிலும் விரைவில் மீள்குடியேற்றம் செய்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதனைவிட ஏற்கனவே பொந்தர் குடியிருப்பு வீதி புனரமைப்புக்கு நாடாளுமன்ற உறுபபினரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன், பிரதேச செயலர் சத்தியசீலன், பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், தியாகராசா மற்றும் ஹலோ ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகள் முகாமையாளர் டொம் ஜியோர்ஜி பிரதேச இராணுவ அதிகாரிகள் லெப்.கேணல் துசிதசில்வா, மேஜர் சமிந்த, பிரதேச செயலகத்தின் உதவிதிட்டப் பணிப்பாளர் ஜெயகுமார், கிராம அலுவலர் சுதர்சன், மக்கள் அமைப்பு பிரிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (29)

# வீதி அகலிப்பு பணிகளுக்காக நெல்லியடி பேருந்து நிலையம் உடைப்பு



(நெடுங்கேணி)

நெல்லியடியிலுள்ள பேருந்து தரிப்பு நிலையம் நேற்று முன்தினம் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினரால் உடைக்கப்பட்டது.

நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்ற வீதி அகலிப்பு வேலையைத் தொடர்ந்தே இப்பேருந்து நிலையம் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் உடைக்கப்பட்டுள்ளது.

இப் பேருந்து நிலையம் சுமார் 1983 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகவும், தற்போது அப்பகுதியில் சுற்றுவீதி அமைப்பதற்கு இடைஞ்சலாக இருப்பதனையும் கருத்தில் கொண்டே இப்பேருந்து நிலையம் உடைககப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி வேலைகள் நன்மையைத்தந்தாலும் சுமார் 30 வருடகாலமாக இருந்த பேருந்து நிலையம் அழிக்கப்பட்டதை பல மக்கள் மன நெருடலுடன் பார்வையிட்டனர். (12)

# கடற்தொழில் பரிசோதகர்கள் ஐந்து பேருக்கு பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் கடற்தொழில் பரிசோதகர்களாக பணியாற்றி வந்த ஐந்து பேருக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருப்பதாக யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடற்தொழில் பரிசோதகர் பதவி நிலை II இன் கீழ் பணிபுரிந்து வந்த இந்த ஐந்து பேரும் 22.05.2012 இல் இருந்து கடற்தொழில் பரிசோதகர் பதவிநிலை I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பா.ரமேஸ்கண்ணா, ப.ஜெயசீலன், வி.கலிஸ்ரன், எம்.பி. அன்ரூ, ந.மகேஸ்வரன் ஆகியோரே இவ்வாறு பதவியுயர்வு பெற்றுள்ளனர். (பா)

# புலமைப்பரிசில் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

அருணோதயக்கல்லூரியில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 52 பேர் பரீட்சைக்குத் தோற்றி 20 பேர் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

சி.சஜீவன் - 180, யோ.ஜீனுஜா - 178, உ.ரஜனா - 173, ச.விதுசன் - 171, பா.தனோஜன் - 171, கு.ஜெசிலி ஜெனஸ்ரிகா - 170, மோ.மரின்சிகா - 166, ஆ.தமிழிசை - 165, பி.ஸ்ரீஜெனனி - 165, பு.சங்கீர்த்தா - 163, நி.மதுஷா - 162, த.அபர்ணன் - 160, ஜோ.பிரணந்திகா - 160, வி.ஜனனிகா - 159, ஜோ.பானுப்பிரியா - 159, சு.திஷாந் - 152 ச.கம்சினி - 152 ஜெ.விதுஷா - 149, ச.ஜெஸ்மினி - 149, த.சஞ்சிகா - 148.

# முரசின் இன்றைய பலன்

(28.09.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி. நட்சத்திரம் சதயம். பிற்பகல் 2.26 வரை. சித்தயோகம். திதி திரயோதசி முற்பகல் 08.47 வரை. இராகுகாலம் 10.32 - 12.02 வரை. சுபநேரம் 6.02 - 7.32 வரை. எமகண்டம் 3.02 - 4.32 வரை. குளிகன் காலம் 7.32 - 9.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முன்னேறும் வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். வியத்தகு செயல்கள் நடக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம். தாராள பணவரவு. பதவி உயர்வு. |
| ரிஷபம் | தேவையற்ற சஞ்சலம். சிந்தித்து செயற்பட வெற்றி. அதிக உழைப்பு. சிக்கனம் நல்லது. உடல்நலத்திற்கு உணவில் கவனம். தியானம், தெய்வ வழிபாடு. |
| மிதுனம் | சினம், சிலர் மனதை புண்படுத்தலாம். சூழ்நிலை அறிந்து பேசுக. நம்பிக்கை தொழில் வளர உதவும். வரவை விட செலவு அதிகம். உடல் நலக்குறைவு. |
| கடகம் | புதிய வேகமும், விவேகமும் இருக்கும். புதிய வாய்ப்புக்கள், நன்மை. பணவரவு கூடும். குழந்தைகளின் படிப்பு, எதிர்காலத்துக்கு முடிவுவெடுப்பீர்கள். |
| சிம்மம் | முன்னேற்பாட்டு நடவடிக்கைகள். கூடுதல் உழைப்பால் எதிர்பார்த்த அனுகூலம். செலவுக்குத் தேவையான பணவரவு. எதிாபாராத உதவி கிடைக்கும். |
| கன்னி | பாராட்டும், எதிர்பார்த்த வெற்றியும். தொழில் சிறந்து, அதிக பணவரவு. குடும்ப தேவைகள் நிறைவேறும். உறவினர் வருகை மகிழ்ச்சி. நம்பிக்கை வளரும். |
| துலாம் | புதிய பணி ஒன்று வரும். ஆலோசனை உதவும். சச்சரவு தவிர்க்கவும். பேராசை அல்லல் தரும். கடன் பெற நேரிடலாம். குடும்பத்தினரால் ஆறுதல். |
| விருச்சிகம் | குறை கேட்க நேரிடும். ஆடம்பர செலவை தவிர்க்கவும். தொழிலில் போட்டி. கடுமையான உழைப்புக்குப் பின் பணவரவு. திட்டமிட்ட பயணத்தில் மாறுதல். |
| தனுசு | பிரச்சினையாக இருந்தவைக்கு தீர்வு கிடைக்கும். புத்துணர்வு. தொழில் முன்னேற்றம். உபரி பண வருமானம். தாய்வழி உறவினரால் நன்மை. |
| மகரம் | செயல்களில் நேர்த்தியும், சமயோசிதமும் இருக்கும். சமூக நிகழ்வுகளில் ஆர்வம். உதவிகள் கிடைக்கும். பணவரவில் முன்னேற்றம். குடும்பப் பிரச்சினை தீரும். |
| கும்பம் | பணிகளில் இலக்கை எய்துவீர்கள். மகிழ்ச்சி கூடும். தொழில் வளர்ச்சியும், நற்பலனும். உபரி பணவருமானம். உண்டு மகிழ்வீர்கள். நண்பர் சந்திப்பு. |
| மீனம் | வெளிவட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். போட்டி இருக்கும். கவனமுடன் செயற்படுவதால் தொழில் சிறக்கும். வெளியூர் நற்செய்தி. உடல்நல ஓய்வு அவசியம். |

# மரக்கறிகளின் வருகைக்கேற்ப கொள்வனவுகள் இல்லை

## - விவசாயிகள் கவலை -

(கிரு- சிகரம்)

வேண்டியளவு தாராளமாக மரக்கறி வகைகள் காணப்படுகின்றபோதும், அவற்றைக் கொளவனவு செய்யும் நுகர்வோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுவதாக திருநெல்வேலிச் சந்தை மரக்கறி வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன், தம்புள்ளையிலிருந்தும் அதிகளவான மரக்கறிகள் தற்போது யாழ்ப்பாணத்திற்கு வருவதால் மரக்கறிகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்து காணப்படுவதாகவும், இதனாலும் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.



இதன்படி நேற்று முன்தினம் ஒரு கிலோ முருங்கைக்காய் 20 - 30 ரூபா வரையும், வெங்காயம் 50 - 70 ரூபா வரையும், பயிற்றை 50 - 70 ரூபா வரையும், வெண்டி 40 ரூபாவாகவும், தக்காளி 30 - 40 ரூபாவாகவும், கத்தரிக்காய் 50 ரூபாவாகவும் காணப்படுவதாக கூறிய வியாபாரி ஒருவர், இவை ஒரு மாதத்துக்கு முன்னர் 100 முதல் 300 ரூபா வரை விற்கப்பட்டதாகவும் கூறினார்.

மரக்கறி விலை தொடர்பில் கருத்துத் தெரிவித்த விவசாயி ஒருவர், எனது பாட்டன் முப்பாட்டன் காலம் முதல் விவசாயம்தான் எங்கட பிரதான தொழில். அதனால் இப்ப நிலவுகின்ற வறட்சியிலும் நகையை அடைவு வைத்துத்தான் விவசாயம் செய்தனான். ஆனால் தற்போது இந்த விலை வீழ்ச்சியால் அடைவு வைத்த நகையை மீட்கக்கூடிய பணம் கிடைககுமோ தெரியாது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலைமை தொடர்ந்தால் விவசாயிகள் விவசாயத்தை அறவே கைவிட்டு விடக்கூடிய சூழ்நிலை உருவாகும் எனவும் அவர் கவலையுடன் தெரிவித்தார்.

## சுழற்சி முறை அவசியம்

(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் சுழற்சி முறையில் டெஸ்ட் அணியில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என அவுஸ்ரேலிய பயிற்றுவிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

வீரர்களின் களைப்பைத் தடுப்பதற்கும், உபாதைக்கு இலக்காவதைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த சுழற்சிமுறையின் மூலம் பலன் கிடைக்கும் என பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆத்தர் தெரிவித்துள்ளார்.

விசேடமாக பட் குமின்ஸ், ஜேம்ஸ் பட்டின்சன் மற்றும் மிச்சல் ஸ்டாக் ஆகியோர் சுழற்சிமுறையில் அணியில் உள்வாங்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவுஸ்ரேலிய தெரிவாளர்கள் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் மிக்கி ஆத்தர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அணியில் வேண்டும் ரசாக்

(லாகூர்)

பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்துல் ரஷாக்கைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாகிஸ்தான் அணியின் 15 பேர் கொண்ட அணியில் ரஷாக் இடம்பெற்றுள்ள போதிலும், இதுவரை இரண்டு போட்டிகளிலும் அவர் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் அணியின் முன்னாள் அதிவேகப் பந்துவீச்சாளர் சொய்ப் அக்தர், தடுமாறி வரும் வேகப்பந்து வீச்சாளர் சொஹைல் தன்வீருக்குப் பதிலாக அப்துல் ரஷாக் அணியில் சேர்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். தடுமாறிவரும் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சுத் தடுமாற்றங்களைக் குறைக்கவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி குழுநிலையில் தான் பங்குபற்றிய இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ள போதிலும் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருக்கவில்லை. உமர் குல்லும், சொஹைல் தன்வீரும் விக்கெட்டுக்களை அதிகளவில் கைப்பற்றத் தவறியதோடு, ஓட்டங்களையும் அதிகமாக விட்டுக் கொடுத்திருந்தனர். இந்நிலையில் அப்துல் ரஷாக்கை அணிக்குள் கொண்டுவந்தால் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளராக அப்துல் ரஷாக் செயற்பட முடியும் எனத் தெரிவித்த சொய்ப் அக்தர், அத்தோடு பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டமும் பலம் பெறும் எனவும் தெரிவித்தார். சொய்ப் அக்தரின் கருத்துக்களை பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்களான மொய்சீன் கான், ரஷீட் லத்தீப், பசிட் அலி ஆகியோரும் வெளிப்படுத்தியுள்ளனர்.

## காலிறுதியில் ஷரபோவா, வோஸ்னியாக்கி



(ரோக்கியோ)

ஜப்பானில் நடைபெற்று வரும் பான் பசிபிக் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட, நட்சத்திர வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி மற்றும் மரிய ஷரபோவா தகுதி பெற்றுள்ளனர்.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடைபெற்று வரும் பான் பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் தொடரின்

மூன்றாவது சுற்றில் சீனாவின் லிநாவுடன் வோஸ்னியாக்கி ஆகியோர் மோதினர். 4,6 என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார். பின்னர் சுதகாரித்துக் கொண்டு விளையாடிய வோஸ்னியாக்கி 4,6, 6,3, 6,4 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு 3ஆவது சுற்று ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா 6,2, 7,6 (7,5) என்ற நேர் செட்களில் லூசி சபரோவாவை (செக்.) வீழ்த்தி காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

## விசேட தேவையுடையோரை மகிழ்வித்த இலங்கை வீரர்கள்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் பயிற்சிகளில் ஈடுபடுவதைப் பார்வையிட விசேட தேவையுடையவர்களுக்கு வாய்பொன்று ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

ஐ.சி.சி.யின் ருவென்ரி–20 உலகக் கிண்ண தொடரில் லீக் சுற்றுகள் முடிவடைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் ஓய்வு நாளாக இருந்தது.

இந்நிலையில் இலங்கை அணி வீரர்கள் போட்டிகளில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனைப் பார்வையிடுவதற்கும் கிரிக்கெட் வீரர்களுடன் கலந்துலையாடுவதற்கான வாய்ப்பு விசேட தேவையுடையோருக்காக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இதில் மலிங்க, குலசேகல, சண்டிமல் உள்ளிட்ட வீரர்கள் விசேட தேவையுடையோரின் தேவைகளைக்கேட்டறிந்து, அதற்கான உதவிகளைகயும் செய்து கொடுப்பதாகத் தெரிவித்தனர்.

இவர்களின் தேவைகளை நிச்சயமாகப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. அந்த வகையில் இந்தப் பொறுப்பை உணர்ந்து அனைவரும் செயற்படவேண்டும் என குலசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## எந்த இலக்கையும் விரட்டுவோம்



(கொழும்பு)

எமது அணியால் எந்தவொரு இலக்கையும் துரத்தியடிக்க முடியும். அந்த வகையில் இந்த ருவென்ரி-20 உலகக் .கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அரிய வாய்ப்பு எமக்கே அதிகம் இருக்கின்றது என பாகிஸ்தான் அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

எந்த இலக்காக இருந்தாலும் அதை துரத்திப் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியிலும் நாம்அடைந்த வெற்றி அந்தவகையிலேயே அடங்கும். அழுத்தம் மிகுந்த இப்போட்டியில் எமது துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தி வெற்றியைப் பதிவாக்கியிருந்தனர். இருப்பினும் எமது பந்து வீச்சில் சற்று முன்னேற்றம் தேவைப்படுகின்றது. அடுத்துவரும் போட்டிகளில் இது சரி செய்யப்படும் என்று நம்புகின்றேன்.


பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டம் சிறப்பான முறையில் உள்ளது. குறிப் பாக, இம்ரான் நசீர், கம்ரன் அக்மல், மலிக் சிறந்த ஆட்டத்திறனுடன் இருப்பது மகிழ்ச்சி. போட்டிக் களத்தில் உரியதிறமைகளை வெளிப்படுத்தி கிண்ணத்தை வெல்வோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பௌண்சர் பந்துவீச்சின் மூலம் இந்தியாவுக்கு நெருக்கடி கொடுப்பேன்

(கொழும்பு)

இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு பௌண்சர் பந்துகள் வீசி நெருக்கடியை ஏற்படுத்துவேன் என அவுஸ்ரேலிய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் பற் கமின்ஸ் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் அவுஸ்ரேலிய – இந்திய அணிகள் சூப்பர் – 8 போட்டியில் மோதவுள்ளன. இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டாவறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



இந்திய அணியின் சில துடுப்பாட்ட வீரர்கள் பௌண்சர் பந்துகளுக்கு விருப்பத்தை வெளிப்படுத்தாதவர்கள். அதன் காரணமாக இன்று இடம்பெறவுள்ள போட்டியின் போது அவர்களுக்கு பௌண்சர் பந்துகளை வீச எதிர்பார்த்துள்ளேன்.

இந்தியாவின் சுரேஷ் ரெய்னா, கௌதம் கம்பீர் மற்றும் இன்னும் சில வீரர்கள் பௌண்சர் பந்துகளுக்கு சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தாத வீரர்கள். அவர்களுக்கு பௌண்சர் பந்துகளை வீசி நெருக்கடியை ஏற்படுத்துவேன். ஆகவே பௌண்சர் பந்துகளை வீசும் இந்தத் திட்டம் வெற்றியளிக்கும்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான போட்டியில் நான் சிறப்பாக பந்து வீசவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். ஏற்கனவே வகுத்த திட்டங்களுக்கேற்றவாறு நாங்கள் பந்து வீசியிருக்கவில்லை. தொடர்ச்சியாகச் சிறந்த பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இதன் மூலம் இந்திய அணிக்கெதிரான போட்டியில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

பாகிஸ்தான் -
தென்னாபிரிக்கா
கொழும்பு மாலை 3.30 மணி

இந்தியா-
அவுஸ்ரேலியா
கொழும்பு இரவு 7.30 மணி

## நடுவர் சைமன் டபள் ஓய்வு



(கொழும்பு)

உலகின் தலைச்சிறந்த கிரிக்கெட் நடுவர்களில் ஒருவரான அவுஸ்ரேலியாவின் சைமன் டபள் ஓய்வு பெறபோவதாக அறிவித்துள்ளார்.


41 வயதான டபள் 2004 முதல் 2008 வரை தொடர்ந்து 5 முறை ஐ.சி.சி.யின் சிறந்த நடுவருக்கான விருதை பெற்றிருக்கிறார். 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரில் நடுவராக பணியாற்றினார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின்(ஐ.சி.சி) சிறந்த நடுவர் குழுவில் (எலைட் பேனல்) இடம் பெற்றிருந்த சைமன் டபள், இலங்கையில் இடம்பெற்று வரும் ருவென்ரி–20 உலகக் கிண்ண தொடருடன் நடுவர் பணியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தொழில் ரீதியாகவும், தனிப்பட்ட காரணங்களுக்காகவும் சர்வதேச நடுவர் பணியில் இருந்து விலகுகி றேன். நடுவர் பணிக் காலம் முழுவதும் எனது மனைவி மற்றும் குழந்தைகள் எனக்கு ஆதரவாக இருந்தனர். அவர்களுடன் நிறைய நேரத்தை செலவழிக்க விரும்புகிறேன். அதற்கு இதுவே சரியான நேரம் என்றார்.

1999ஆம் ஆண்டு சர்வதேச நடுவர் வாழ்க்கையை தொடங்கிய சைமன் டபள் இதுவரை 74 டெஸ்ட் மற்றும் 174 ஒரு நாள் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியிருக்கிறார்.

## புதிய தேர்வுக்குழுத் தலைவர்



(மும்பை)

இந்திய கிரிக்கெட் சபை புதிய தேர்வு குழுத் தலைவராக ரோஜர் பின்னி நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று நடந்த கிரிக்கெட் சபையின் பொதுக்குழுக் கூட்டத்தின் முடிவில் அவரது பெயர் அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீகாந்தின் பதவி காலம் முடிந்ததைத் தொடர்ந்து ரோஜர் பின்னி புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேர்வு குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து முன்னாள் வீரர் மொகீந்தர் அமர்நாத் நீக்கப்பட்டுள்ளார். அவர் ஒரு ஆண்டே அந்தப் பதவில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்றைய தினம் மூன்று மைதானங்களில் இடம்பெறவுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரியினால் நடத்தப்படும் தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று முதல் நாளை வரை நடைபெறவுள்ளது.

இதில் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகிய மைதானங்களில் இடம் பெறவுள்ளது.

12 அணிகள் பங்குகொள்ளும் இப்போட்டித் தொடர் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் ஆட்டமாக இடம் பெறவுள்ளது.

'ஏ', 'பி', 'சி', 'டி' என நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதில் 'ஏ' பிரிவுப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலும், 'பி' பிரிவுப் போட்டிகள் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும், 'சி', 'டி' பிரிவுப் போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானங்களிலும் இடம்பெறவுள்ளன.

இதில் 'ஏ' பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ரெட் அணிகளும், 'பி' பிரிவில் நவீல்ட் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி பிளைக் அணிகளும், 'சி' பிரிவில் ஹாட்லிக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிகளும், 'டி' பிரிவில் ஸ்ரான்லிக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன.

(எஸ்.பி.)

# மாவட்ட கூடைப்பந்து; விண்ணப்பிக்க வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் வருடாந்தம் நடாத்தும் ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்படி சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகளை எதிர்வரும் மாதம் நான்காம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை யாழ். கூடைப்பந்தாட்டச் செயலாளரிடம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ)






# திரேசன் அதிரடி; மத்திய கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

திரேசனின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது.

கொழும்பு என்.சி.ஏ. அணிக்கும் யாழ். மத்திய கல்லூரியின் 15 வயதுப் பிரிவு அணிக்குமிடையிலான சிநேகபூர்வ ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி ஒன்று கடந்த 18ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி திரேசனின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ்.மத்திய கல்லூரிஅணி 20 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. இதில் திரேசன் 66 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கோமோதரன் 33, டினோஜன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பி. சேனால் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 149 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொழும்பு என்.சி.ஏ. அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சி. சேனால் 15, பி.சேனால் 18 ஓட்டங்களைப்பெற்றனர்.பந்து வீச்சில் கௌதமன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

(எஸ்பி.)

# அரச அதிபர் பட்மின்ரன்

## சங்கானை பிரதேச செயலகம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண பட்மின்ரன் பேபூட்டியில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பிரதேச செயலக ஊழியர்களுக்கான யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண பட்மின்ரன் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அதில் ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட செயலக அணியும், சங்கானைப் பிரதேச செயலக அணியும் தகுதி பெற்றன. இதில் ஒற்றையர் பிரிவில் சங்கானைப் பிரதேச செயலகம் 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றதோடும் இரட்டையர் பிரிவில் 1-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, பெண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி முதலாமிடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி)



அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட ஊரெழு றோயல் அணி விருந்தினர்களுடன் இருப்பதைக் காணலாம். (93)

# பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் வென்றது மயிலங்காடு ஞானமுருகன்

(இளவாலை.)

பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை மயிலங்காடு ஞானமுருகன் அணி கைப்பற்றிக் கொண்டது. யாழ். கால்பந்தாட்ட லீக், வலிகாமம் கால்பந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட பிரான்சிஸ் நினைவாக கால்பந்தாட்டத் தொடர் அண்மையில் நடத்தப்பட்டது.



இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணியும், பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் மோதின.

யாழ். மாவட்டத்தில் இரு அணிகளுமே பிரபலம் மிக்க அணி என்பதால் இறுதிப் போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் தசரதன் முதல் கோலை அடித்து எதிரணிக்கு அதிர்ச்சி அளித்தார். தொடர்ந்து இரு அணிகளுமே விறுவிறுப்பாக மோத, ஆட்டத்தின் பரபரப்பு அதிகரித்தது. தொடர்ந்து 13ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் சேகர் தனக்குக் கிடைத்த வாய்ப்பை சிறப்பான முறையில் பயன்படுத்தி அதனைக் கோலாக்கியதுடன் அணியையும் முன்னிலைப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து இரு அணி வீரர்களும் வேகமான ஆட்டமுறையில் ஈடுபட்டனர். நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முற்பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனீஸ் வீரர் கலிஸ்ரஸ் சிறப்பானதொரு கோலைப் போட்டு சக வீரர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தினார்.

இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, 2-1 என்ற கணக்கில் ஞானமுருகன் அணி முன்னிலை பெற்றிருந்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 15ஆவது நிமிடத்தில் சென். அன்ரனீஸ் வீரர் கலிஸ்ரஸ் மீண்டுமொரு சிறப்பான கோலைப் போட ஆட்டம் 2-2 என்ற கணக்கில் சமநிலைபெற்றது. இதனைத் தொடர்ந்து இரு அணி வீரர்களுமே வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ளும் முனைப்புடன் தமது உச்ச ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ஆடியிருந்தனர். இந்த வேளையில் இரு அணி இரசிகர்களும் கைகளைத் தட்டிகரகோசமிட்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர். விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை அடைந்த நிலையில் போட்டி நிறைவடைய ஐந்து நிமிடங்கள் இருக்கும் நிலையில் ஞானமுருகன் வீரர் தசரதன் தனக்குக் கிடைத்த வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்தி, அதனைக் கோலாக்கி அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.இறுதியில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பிரான்சிஸ் வெற்றிக் கிண்ணத்தைக்கைப்பற்றிக் கொண்டது.அண்மையில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டிகளில் மிகவும் விறுவிறுப்பு மிகுந்த ஆட்டமாக இவ்இறுதிப் போட்டி அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தொடரின் சிறந்த வீரராக மயிலங்காடு ஞானமுருகன் அணியைச் சேர்ந்த சேகரும், சிறந்த கோல் காப்பாளராக சென். அன்ரனீஸ் வீரர் ஜதீபனும் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டியை ஏராளமான கால்பந்து இரசிகர்கள் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.,22)



# வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய

வடமராட்சி
அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்
சுவாமி கோவில்
துன்னாலை - புலோலி
நந்தன வருஷ மஹோற்சவம் - 2012

## இரதோற்சவம்
## பிரதம குருமார்களின் நல்லருளாசிகள்

**ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜீஞாநம் ரஜஸோ லோப ஏவச 1**
**ப்ரமாதமோஹெள தமஸோ பவதோ அஜ்ஞாநமே வ ச 11. 17**
**சத்வகுணத்திலிருந்து ஞானம் உண்டாகிறது, ராஜோ குணத்தினின்று ஐயமின்றிய பேராசை உண்டாகிறது, தமோ குணத்தினின்று கவனமின்மையும், மதிமயக்கமும் உண்டாகின்றன. மேலும் அறியாமையும் உண்டாகின்றது.**

*ஸ்ரீமத்பகவத்கீதை, பதின்நான்காவது அத்தியாயம் 17 சுலோகம், அவனருளாலே அவன் தாழ் வணங்கி: -*

எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ வல்லிபுர சக்கர மாயவன் தாழ்பணிந்து, சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுரக் கோவிலின் நந்தன வருஷத்தின் மஹோற்சவம், சென்ற ஆவணி 29 ஆம் நாள் (14.09.2012) வெள்ளிக்கிழமை ஐந்தொழிலிலொன்றான படைத்தல் தொழிலின் காரணமான கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி காத்தல் தொழிலின் நிமித்தமான வீதி வலம் வந்து அருளும் தூய்மையாக திருவிழாக்கள் இனிதே நடைபெற்று, எம்பெருமான் சம்காரத் தொழிலின் நிமித்தமான இரதோற்சவம் இன்றையதினம் புரட்டாதி 12 ஆம் திகதி (28.09.2012) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவம் என்னும் கொடிய மலத்தை அழித்து தூய் மைப்படுத்துவது தான் அதன் தார்ப்பரியமாகும்.

நாளையதினம் வரலாற்றுடன் தொடர்புடைய கடல் நீராடல் தீர்த்தம் நடைபெறும், நாளை மறுதினம் (30.09.2012) ஞாயிறன்று அருளல் தொழிலின் நிமித்த மான தீர்த்தத் திருவிழாவும் கொடியிறக்கத்துடன் மறை தல் தொழிலின் நிமித்தமான திருவிழாவும் நடைபெறும் இந்த நாட்களில் எம்பெருமானை வந்து தரிசிக்கும் அடியவர்கள் அனைவரும் எம்பெருமானின் நல்லருளைப் பெறுவார்கள் என்பது திண்ணம். எம்பெருமானை நினைத்து வழிபடும் அனைவருக்கும் எல்லாம் வல்ல வல்லிபுர் மாயவனின் நல்லாசி களும் எமது நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக. நாட்டினர் அனைவரும் சமாதான சக வாழ்வுடனும் நீடித்த அமைதியுடனும், சுபீட்சம் நிறைந்த நல் வாழ்வைப் பெற வாழ்த்தி எம்பெருமானைப் பணிகின்றோம். சுபம் நன்றி.

**ஸ்ரீ ஆழ்வார் பீடம்**
**ஸ்ரீ வல்லிபுரக் கோவில்**
**துன்னாலை, புலோலி**

பிரம்மஸ்ரீ சகசுதர்சனக் குருக்கள் J.P
பிரம்மஸ்ரீ ச.க.புருசோத்தமக் குருக்கள் J.P
பிரதான குருமார்கள்
பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக் குருக்கள் மஹோற்சவ குரு (இளையகுரு)




## வல்லமை தரும் வல்லிபுரத்தான்

உலகத்தவர்கள் கைகூப்பி வணங்கும் விஷ்ணு ஆலயங்களில் வல்லிபுரக்கோயில் மிகவும் பழமையும், சிறப்பும் கொண்டமைந்ததாகும்.

வல்லிபுரக் கோயில் திருவிழாக்கள் புரட்டாதி மாத பௌர்ணமிக்கு சமுத்திர தீர்த்த உற்சவமாகக் கொண்டு திருவிழாக்கள் ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து பதினேழு நாட்கள் இடம்பெறும். இதில் முக்கிய திருவிழாக்களாகும் இரத உற்சவம், சமுத்திரத்தீர்த்த உற்சவம், கேணித்தீர்த்த உற்சவம், (பட்டித்தீர்த்தம்) போன்றன இச்சிறப்பு மிக்க உற்சவங்கள் சிறப்புற அமைய எல்லாம் வல்ல மாயவனைப் பிரார்த்திப்போம்.

**வை. ஆனந்தராசா**
**பீடாதிபதி**
**பெரியாழ்வார் ஆச்சிரமம்**






**செல்வா பிறிண்டிங்**
சகலவிதமான பிறிண்டிங் வேலைகளுக்கும் தொடர்புகொள்ளவேண்டிய ஸ்தாபனம் செல்வா பிறிண்டிங்

**தீபன் பஸ் புக்கிங் சென்ரர்**
உடுப்பிட்டி - கொழும்பு
கொழும்பு - உடுப்பிட்டி
தினசரி உடுப்பிட்டி -கொழும்பு பஸ் சேவை

வி.வி.ரி ரேறாட், நாவலடி, உடுப்பிட்டி.
T.P.No :- 021 226 3332
078 914 4545 - செல்வா
077 923 4972 - தீபன்

உரிமையாளர் :- K. செல்வராஜா

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
**ஜெயகாயத்திரி சிற்ப நிலையம்**
தாம்பரவிக்கிரகம், சிலா விக்கிரகம், திருவாசிகள், கொடித்தம்பம், அங்கிகள், மணிகள் முதலான சிற்ப வேலைகளையும் பொலிசிங் பிளேற்றிங் வேலைகளை தரமான முறையில் செய்திட
1 ஆம் கட்டை பருத்தித்றை
மா.ஜெயானந்தம் ஆச்சாரி
T.P 077 645 5484
077 532 5875

**LOTUS NET**
- Net Browsing
- Net phone
- IDD Call
- Fax
- Vedio Call Lamanating
- Sim Cards
- Relaod
- Colour Printing
- Colour Photo copy
- B & W Photo Copy
- Book Spiral Dinding
- Scaning

Fax 021 742 9396
Tel 021 742 9395
e-mail lotusnet66@yahoo.com

**றெஜினா ரான்ஸ்போட் அன் என்ரபிறைஸ்**
கட்டடப்பொருள்கள் சில்லறை மொத்த வியாபாரம்
உரிமையாளர்
ம.தேவரத்தினம்.
தொ.பே. 077 6030831
தும்பளை வீதி,
பருத்தித்துறை,

**கலை தையலகம்**
பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சகலவிதமான ஆடைகளை நவீன முறையில் தைத்துக்கொடுக்கப்படும்
உரிமையாளர்
ச.சிறி கௌரி.
1ஆம் கட்டைச்சந்தி
பருத்தித்துறை,

**குகன் ஸ்ருடியோ அன் கலர் லாப்**
1936 ஆம் ஆண்டில் இருந்து சிறந்த சேவையில் தெளிவான விரைவான புகைப்படசேவையில் அனுபவம்மிக்கவர்களான
T.P - 021 226 3218
பருத்தித்துறை.

**ஸ்ரீ சாயி கிராபிக்**
மங்களகரமான அனைத்து வைபவங்களையும் வீடியோ அன் போட்டோக்களாகவும் அல்பங்களாகவும், பாஸ்போட் புகைப்படங்கள், அடையாளஅட்டை புகைப்படங்கள் 1 மணி நேரத்தில் எடுத்துக்கொள்ள நாடுங்கள்
வீடியோ மிக்சிங், அல்ப டிசைனிங், VHS இல் இருந்து DVD இற்கு, DVDஇல் இருந்து VHS இற்கு மாற்றவும் நாடுங்கள்.

**நிதர்ஷன் கிறீம் ஹவுஸ்**
சகல விதமான கிறீம் வகைகளையும் ஓடராகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
T.P 077 621 4224
165/2 பஸ் விலையம்,
பருத்தித்துறை.

**THE INTER NET BROWSING CENTRE**
- Western Union Money Transfer
- Inernet Browsing
- Computer Accessories


Yarl Road, Udppiddy
S. Senthan
021 205 5805

**அம்பிகை களஞ்சிய**
தரமான பலசரக்குப் பொருட்களை மலிவான முறையில் பெற்றிட
உரிமையாளர்: நடராசா நாகேந்திரம்
தொ.பே. 077 232 8914
சாவகச்சேரி வீதி,
மந்திகை,
புலோலி.

**புதிய றிச் மொபைல்**
சகலவிதமான கைத்தொலைபேசிகளும் விற்பனை மற்றும் திருத்திக் கொடுக்கப்படும்
பிரதான வீதி
நெல்லியடி
075 55 22293

# ...ய தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 2012

## அரி கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா



அன்று பிருந்தாவனத்திலே கோபியர்களைக்காக்க கோவர்த்தன மலையை தூக்கிப்பிடித்தவன் கண்ணன். அவ் அற்புதம் கண்டு பிருந்தாவன மக்கள் கோவிந்தா கோபாலா என்று அழைத்து மெய் உருகி மகிழ்ந்தார்கள். ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்பிருந்தாவன நாயகன் கண்ணன் 28.09.2012 வெள்ளிக்கிழமை கேட்டவர்களுக்கு கேட்கும் வரம் கொடுக்க தேரேறி வருகின்றார். எம்பாவ வினைகளை அறுத்து பரந்தாமனின் அவ், ரத பவனி யைக் கண்டு மக்கள் கூட்டம் அலைமோதும்.

29.09.2012 சமுத்திரத்திலே ஆஞ்சனேயர் தீர்த்தம் ஆடுவார். ஜனசமுத் திரம் ஒருபுறம், பாற்கடல் மறுபுறம், கிழக்கில் சந்திர உதயமும், மேற்கில் சூரிய அஸ்தமனமும் அப்படிப்பட்ட ஒரு பொழு தில் தான் 'லவல்லி' என்ற பெண் குழந்தைப்பேறு அற்று வேண்டியதற்காக அருள்பாலித்தவர். வங்கக்கடலிலே நீருழவர் கடலை உழுகின்ற போது அலை பொங்குற்றதுடித்தனர். மீனவர் அர்களுடைய வலைகளை அறுத்துக் கொண்டு துள்ளி விளையாடியது. மீன் கரையில் வந்ததும் தன்னுடைய பக்தை மடியில் குழந்தையாக உருவெடுத்தது. சக்கரமாக மாறியதாக ஒரு ஐதீகம். இது போலவே வட மதுராபுரியிலும் ஒரு அதிசயம், அற்புதம் ஆவணி மாதத்தின் அட்டமியிலே அன் நடு நிசியிலே காற்று சுழன்று அடித்தது மின்னல் மின்னியது அந் நள்ளிரவிலே சிறைக்கூடக் கதவுகள் திறந்தன.

பாரளந்த கண்ணன் தேவர் குறைதீர்க்க சரசோதையின் மடியில் உதித்தார். அன்றே அவர் பிருந்தாவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். யமுனை ஆறு விலகி வழிவிட ஆதீசீடன் குடைபிடிக்க தேவகி வயிற்றில் உதித்த கண்ணன் யசோதனையின் அரவணைப்பில் வளர்ந்தார். ஒருத்தி மகனாய்ப் பிறந்து கோகிலத்திலே ஒருத்தி மக்னாய் இருந்து வளர்ந்தான், அன்று சக்கரத் தாள்வாராக வல்லிபுரத்திலே எழுந்தருளிய எம்பெருமான் கற்கோவளம் வங்கக் கடலிலே நீராட வருவார் ஆஞ்சநேயர் காளிங்கள், கருடர் ஆகிய வாகனங்களில் எம்பெருமானை கமக்கும் பாக்கியம் பெற்றவர்கள் ஓடி நடந்து வருவார்கள்.

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையிற் புகுந்த
கூடினேன் கூடி இளையவர் தம்மொடும்
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோ பொருளாம்
உணர்வெனும் பெரும்பதம் திரிந்து
நடினேன் நாடி நான் கண்டுகொண்டே
நாராயனா என்னும் நாமம்"

எம்பெருமானுடைய ஆலயத்திற்கு நேர்த்தி போட்டு வருபவர் ஆயிரம். நாகதோசம் நீங்க நாடிவரும் பக்தர் ஆயிரம். குழந்தைப்பேறு வேண்டி தம் குறைதீர்க்கும் பக்தர் ஆயிரம் இவர்களுக்கெல்லாம் காத்தற் கடவுள் கண்ணபிரான் தன் அருட்கடாச்சரம் புரிந்து அருள் பாலித்து வருகின்றார்.

"சொன்னால் அடங்காது கீர்த்தி
சோதியாம் திருநாராயன மூர்த்தி"

இங்கு நடைபெறும் வருடாந்த மஹோற்சவங்களிள் ஸ்ரீநாமநவமி, கிருஸ்ண ஜெயந்தி, சுவர்க்கவாயில் ஏகாதசி, வீமஏகாதசி, ஆவணி ஞாயிறு, தீபாவளி, நரகாசுர நாட்களிலும், எம் பக்தர்கள் வந்து அருள்பெற்று செல்கின் றார்கள். அப்படிப்பட்ட எம் பெருமானுடைய இவ்வுற்சவங்கள் சிறக்கவும் அவர் அருள் கிடைக்கவும் வேண்டி நிற்கின்றோம்.

ச.யாதவானந்தன்
ஆசிரியர்.

## மலரமைப்பு பொலிகையூர் விசிந்தன்

## நல்லை ஆதின முதல்வரின் ஆசிச் செய்தி

சிவபூமியாம் இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்திலே வடமராட்சிப் பகுதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் காத்தற்கடவுளாகிய வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று தேர் திருவிழா நடைபெறுகின்றது.

இந்த ஆலயம், மூர்த்தி, தலம் தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற ஓர் அற்புத திருத்தலமாகும். இங்கு அருள்பாலிக்கும் வல்லிபுர பெருமான் பல அற்புதங்களை நிகழ்த்தியவர்.

ஐந்தொழில்களிலே இரதோற்சவமானது அழித்தலைக் குறித்து நிற்கின்றது. இன்றைய இவ் உற்சவ நன்றாளிலே அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் திருவருள் எல்லோருக்கும் கிடைத்து இன்புற்று, வாழ வேண்டும் என அவர் தம் பாதம் பணிந்து வேண்டுகின்றேன். எல்லோரும் நலமாக வாழ உளமார ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
ஸ்ரீல ஸ்ரீசோமசுந்தர பரமாசசர்மா சுவாமிகள்.

அபி மோட்டார்
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கீகாரம் பெற்ற முகவர்
மோட்டார் சைக்கிள் விற்பனையாளர்
077 870 0600
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

றெயின்போ ரைஸ்ஸ் ஸ்ரோர்ஸ்
சீற், சிமெந்து, பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள், எஸ்லோன் பி.வி.சி.பைப் வகைகள், கட்டப் பொருள்கள் விவசாய மருந்து வகைகள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சாரப் பொருட்கள்
உரிமையாளர் ஜெ.துசாந் (கோபி)
T.P 077 869 5418
021 226 2696
பருத்தித்துறை வீதி,
சிலையடி மந்திகை.

பிறின்சிக்கா மதர் & சைல்ட் கெயர்
குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொருட்கள், உபகரணங்கள், ஆடைகள், மங்களகரமான விழாக்களுக்குத் தேவையான அன்பளிப்புப் பொருட்களும்
077 989 3678
021 226 4298
தும்பளை வீதி, பருத்தித்துறை.

...க்ஸ்
ம.ம.வி வீதி,
கரவெட்டி,
நெல்லியடி.
077 136 8780

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)
- கூட்டுறவுச் சங்கம்
- கூட்டுறவு நகர் விற்பனை நிலையம்
- வாடகை சேவைகள் (கதிரை, சாப்பாட்டுக் கோப்பை, தண்ணீர் குவளைகள்)
- போட்டோப்பிரதி சேவை
- விவசாய சேவை
- இரும்பு விற்பனை
- கிராமிய வங்கிச் சேவை
- லொறி போக்குவரத்துச் சேவை
- வாகன சுத்திகரிப்பு
- கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி
- பிடவை விற்பனை
- பேக்கரி சேவை

T.P 021 226 3273

கிருஸ்ணா வெதுப்பகம்
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட தரமான பாண், பனிஸ், கேக் வகைகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள
உரிமையாளர் பா. சண்முகராசன்
T.P 077 138 7240
சாவகச்சேரி வீதி,
மந்திகை,
புலோலி.

சீராளன் வேக் சொப்
மோட்டார் சைக்கிள் ஜெனரட்டர் திருத்தியமைத்துக் கொடுக்கப்படும்.
T.P 0772416920
உரிமையாளர் க.ஜெயக்குமார்.
1ஆம் கட்டைச்சந்தி
பருத்தித்துறை

ஒளியருவி விடியோ
டிஜிற்றல் கலர் லாப்
போட்டோ பிறிண்டிங், கலர் பிறின்ரிங் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
...தான வீதி,
...நல்லியடி.

கஜானன் கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்
தரமான கொங்கிறீற் கற்கள், தூண்கள், என்பனவற்றை குறைவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர்: சி.ஸ்ரீஜெயராம்
077 796 3647
1 ஆம் கட்டைச்சந்தி
பருத்தித்துறை

ஹனிஸ் ஹோட்டல்
உரிமையாளர்: ப. கிமல்
021 790 1511
யாழ். வீதி,
உடுப்பிட்டி.


HARI ENGNIEERS
and
CONTRACTROS
Bulding Constrytion,
Bills of Quantity Drwaing
Alvai -
TP. 077 283 0694
S. Jathavan
Bsc, HND in QS

# வைர விழா

## 1952-2012 Sep 28th

## கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

## KN/KILINOCHCHI HINDU COLLEGE






முதல் அதிபர்
**திரு. கா.நாகலிங்கம்**

"ஒரு பாடசாலை திறக்கப்படும் பொழுது ஆயிரம் சிறைச் சாலைகள் மூடப்படுகின்றன" என்கின்ற மகுடவாக்கியத்துக்கு அமைய மருத நிலமாம் கிளிநொச்சிமா நகரில் பல்ஆயிரக்கணக் கான நல்ல பிரஜைகளை உருவாக்கிய எமது கல்லூரிக்கு கட்டுரைவரைவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1952 இல்தொடங்கி இன்றைக்கு அறுபது ஆண்டுகளாக பல் ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய மிகப்பழம் பெருமை படைத்ததுதான் இந்துக்கல்லூரி. அப்படிப்பட்ட நீண்ட நெடியபாரம்பரியம்கொண்டதுதான் எங்கள் கல்லூரி. அறுபது ஆண்டுகள் கல்விப்பணி இக் கல்லூரியில் இருக்கும் பொழுது அதன பெருமை என்ன பெருமை என்ன என்று நினைத்துப்பார்த்தேன். நினைக்கநினைக்க பால்வெளியில் நடக்கும் ஒரு அருமையான நிகழ்ச்சி பற்றி சொல்லவிரும்புகிறேன்.

வாசகர்களே உங்கள்எல்லோருக்கும் தெரியும் பூமி தன்னைத்தானே சுற்றஇருபத்திநான்குமணிநேரமாகும் இரவும் பகலும் நிகழ்கின்றன. அதேபூமி சூரியனை சுற்றுகிறது. ஒரு சுற்று சுற்றுவதற்கு ஒரு வருடம் ஆகிறது. அதாவது எங்கள் இந்துக் கல்லூரிபூமியில் இருப்பதால்




இதுவரை அறுபது முறை சுற்றி சுழன்று பல மாணவ நட்சத்திரங்களை உருவாக்கியுள்ளது மகாதேவா ஆச்சிரமம், ஆரோபணம் இளைஞர் இல்லம், சைவச்சிறுவர்இல்லம் ,மகளிர் ஆச்சிரமம், காந்தி நிலையம் மற் றும் மீனாட்சி அம்மன் கோவில் போன்ற புனித இடங்களுக்கு மத்தியில் ஆதரவுஅற்ற மாணவர்களும் ஏனையோரும் கல்வி பயில்கின்றனர். இப் பாடசாலையின் முதலாவது அதிபராக பொறுப்பு ஏற்றவர் திரு. கா.நாகலிங்கம் ஆவார். நெல்வயல்கள் சூழ்ந்த மருத நிலமாம் கிளிநொச்சி மண்ணில் ஏழாம்வாய்க்கால் என்னும் இடத்தில் டெயிலர் வீதியில் (கரடிபோக்கு-உருத்திரபுரம் வீதி) 28 .09 1952 இல் சுட்டத்தரணி குலசிங்கம் அவர்களின் மூத்த மருமகன் திரு வேகந்தையா அவர்களின் காணியில் ஒருசில மாணவர்களுடன் ஒரு கொட்டைகையில் சைவவித்தியாவிருத் திசங்கத்தினால் கிளிநொச்சி இந்து தமிழ் கலவன்பாடசாலை என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டது.



தற்போதைய அதிபர்
**சி.பாலகிருஷ்ணன்**

பாடசாலையின் கீதத்தை இயற்றியவர் பிரபலமான கவிஞர் சுத்தானந்தபாரதியார் ஆவர். கற்று உணர்ந்து ஒழுகு என்ற மகுடவாக்கியத்தைத் தாங்கி கல்விப்பணியை தொடர்கின்றது. ஆண்டு தோறும் இதன் பெருமை கூறும்வகையில் "இந்து உலா" எனும் நாமத்தில் நூல்வெளிவந்துள்ளது. இப் பாடசாலையில் கல்விகற்றவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக, அதிபர்களாக, ஆசிரியர்களாக, கல்விப்பணிப்பளார்களாக, மருத்துவர்களாக, எந்திரிகளாக, பட்டதாரிகளாக என இன்னும்




**கிளிநொச்சி இந்துக்கல்லூரி**
**வைரவிழாவும்**
**மலர்வெளியீடும் 2012**

காலம்:28-09-2012 (வெள்ளிக்கிழமை)
நேரம்: காலை 9.00
இடம்: பிரதான மண்டபம்

தலைவர்
**Dr.த.சத்தியமூர்த்தி**
(செயலாளர்-பழைய மாணவர்சங்கம்)

பிரதம விருந்தினர்
**திரு.கா.நாகலிங்கம்**
(ஓய்வுநிலை மூத்த அதிபர்)

சிறப்பு விருந்தினர்கள்
**திரு.க.முருகவேல்**
(வலயக்கல்விப் பணிப்பாளர்)

**திரு.ப.அரியரத்தினம்**
(ஓய்வுநிலை
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்)

**திரு.த.குருகுலராசா**
(ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்)

**நிகழ்ச்சிநிரல்**

- விருந்தினரை வரவேற்றல்
- அப்புஜீ வீதி திறந்துவைத்தல்
- மங்கல விளக்கேற்றல்
- கொடியேற்றல்
- நினைவுச்சின்னம் திறப்பு
- வரவேற்பு நடனம்
- .தலைமையுரை
- அதிபர் ஆசிரியர்களை கௌரவித்தல்
- மலர்வெளியீடு

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்
**கல்லூரிச்சமூகம்**

சமூகத்தில் பல்வேறுமட்டங்களில் உயர்ந்த நிலையில் இருகின்றார்கள். மகாதேவா ஆச்சிரமம், குருகுலம் போன்ற ஆன்மிகநிலையங்களுடன் நெருங்கியதொடர்பைக் கொண்டது. பல்வேறு மகான்களும், ஞானிகளும் இக்கல்லூரிக்கு விஜயம்செய்து ஆசிவழங்கி சென்றுள்ளனர். கல்வியிலும், விளையாட்டுகளிலும், சாரணியம், சென்ட் ஜோன்ஸ்படை முதலுதவிபிரிவு ஏனைய இணை பாடவிதானசெயல்களையும் செய்துவருகின்றது. பௌதிகவளங்களாக இரண்டு மாடிகட்டங்கள், ஒருமாடிகட்டடம், க.பொ.த.சாதாரண மற்றும் உயர்தர ஆய்வுகூடங்கள் அத்தோடு மாவட்டத்தில் மிகப்பெரிய மண்டபத்தையும் கொண்டுளளது. எமது பாடசாலை மக்களோடு மக்களாக இருமுறை இடப்பெயர்வை சந்தித்தது. முதன்முதலாக 1996ஆம்ஆண்டு இடம் பெயர்ந்து 2001மே மாதம்வரை ஆனைவிழுந்தான் எனும் இடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

பின்னர் 2008 இக்கல்லூரி மாணவர்கள் தேசியமட்ட சாதனை களையும், வெளிநாட்டு புலமைப்பரிசிலும் பெற்றுகொண்டுள்ளனர் திரு.கயிலாய பிள்ளை அவர்களின் காலத்தில் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம் என்று அழைக்கப்பட இந்தபாடசாலை பின்னர் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. அத்தோடு மட்டு மல்லாமல் இப்பள்ளியின் ஆரம்பப் பிரிவு தனியாக்கப்பட்டு இந்து ஆரம்பவித்தி யாலயமாகப் பெயர் மாற்றப்பட்டது.

எமதுபாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களான திருமதி பிரபாகினி, திருமதி அபராஜிதன், திரு.கருணாநிதி போன்றோர் இறுதியாக நடைபெற்ற போரிலே மரணம் அடைந்துள்ளார்கள் 1991 ஜூன்மாதம்ஐந்தாம் நாள் எங்கள் பாடசாலையின் உயர்தரமாணவன் செல்வன்.கனகசிங்கம் சத்தியமூர்த்தி பள்ளியிலேயே மரணமடந்தமை பாடசாலை வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்வாகும்.



DR.T.Sathiya Moorthy(MD)

எங்கள்பாடசாலையின் பழைய மாணவர் சங்கசெயலரும்பிரபலமான வைத்தியரும் ஆகிய மருத்துவர் த.சத் திய மூர்த்திஅவர்கள் இடர்காலத் தில் தனது உயிரை துச்சமாகமதித்து மக்க ளுக்கு சேவை ஆற்றி சர்வதேச விருதை வென்று எமதுபள்ளிக்கு பெருமைசேர்த் தார். இப்பாடசாலை வரலாற்றில் முன் னாள் மேலதிக மாகாணக கல்விப்பணிப்பாளர் அமரர்.பொன் சபாபதி அவர்கள் அரும்பாடு பட்டு உழைத்தார். போருக்கு பிற்பாடு இப்பாடசாலையில் பிரபல மான நிகழ்வுகள் ஆனவடமாகாணகலை இலக்கிய விழா போன்ற பல நிகழ்வுகளும், அமைச்சர்கள், அரசஉயர் அதி காரிகள் போன்றோர் வருகை தந்தனர். நாடாளுமன்ற உறுப்பி னர்களும் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளனர்.

எதிர்வரும் 28 ஆம் நாள் தனது வைர விழாவை வெகுவிமர் சையாக கொண்டாட வுள்ளது.

எங்களது கனவுஇப்பாடசாலை ஒருதேசியபாடசாலையாக நாமம்பெறவேண்டும்.

**மாவை. ஸ்ரீரஜீவன்**
*இலங்கை ராஜரட்ட பல்கலைக்கழகம்.*

# சாரணர் சங்கத்தினால் பாடசாலைகளில் கணக்கெடுப்பு

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட கிளையினால் பாடசாலைகளில் உள்ள சாரணர்,குருளைச்சாரணர் தலைவர் ஆகியோர்களின் 2012 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்புப் படிவம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முறை பாடசாலைகளில் சாரணர் குருளைச்சாரணர் தலைவர்களுக்கான அங்கத்துவப் பணம் செலுத்த வேண்டியுள்ளதால் அதனைத் தனியாகப் பதிவு செய்வதுடன் அங்கத்துவப் பணம் 30 ரூபாவும் கணக்கெடுப்பு படிவத்துக்கு சாரணருக்கு 35 ரூபாவும், குழு அங்கதவர் மற்றும் சாரணர் தலைவருக்கு 65 ரூபாவும் பணம் செலுத்தவேண்டும்.

இதேவேளை பாடசாலை அணித் தலைவர்களுக்கான பயிற்சி II முன்னர் பயிற்சி I இடம் பெற்ற இடங்களில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் 2 மணிவரை நடைபெறவுள்ளது முன்னோடிப் பயிற்சி எதிர்வரும் 7ஆம் திகதி மின்னல் மைதானத்தில் இடம் பெறும்.

கலைக்கூறு IIபயிற்சியை பெறவிரும்புவோர் விண்ணபத்தை உடனடியாக அனுப்பி வைக்கவேண்டும்.

அத்துடன் மாவட்ட சாரணர் ஆணையாளர் விருது, பிரதம சாரணர் ஆணையாளர் விருது, ஆகியவற்றைப் பெற விரும்புவோர் முறையே உதவி மாவட்ட சாரண ஆணையாளரின் பிரிவு மற்றும் பயிற்சி சிபார்சுடன் விண்ணப்பிக்க வேண்டும் அதனைப் பரிசீலித்து தகுதியானவர்க்கு அவை வழங்கப்படும்.

இதேவேளை மாவட்ட சாரண திரளணி, குருளை சாரணர் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மரதன் ஓட்டத்தில் ஒரு பாடசாலை சாரண துருப்பிலிருந்து எட்டு பேர் மட்டும் பங்குபற்ற முடியும். (சாரணர்கள்) பதிவேடு, சமூக சேவை, அணிநடை, தீப்பாசறை, நடனம், வேதன்வாரம், பாசறைதரம், அணிமூலை, மைதானக்காட்சி, நிலைக்காட்சி, முடிச்சு, செயற்பாடு என்பன இடம் பெறவுள்ளது. (109)

# நல்லூர் பிரதேச சபையால் வீதி விளக்குகள் பொருத்தல்

(கிரு-சிகரம்)

நல்லூர் பிரதேசசபை பகுதியில் மக்கள் பங்களிப்புடன் 720 வீதி மின் விளக்குகள் பொருத்தபட்டுள்ள நிலையில், மேலும் 300 விளக்குகள் பொருத்தப்படவுள்ளதாகவும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேசத்தை ஒளியூட்டும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இதற்கு நல்லூர் பிரதேச மக்கள் சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வீதி மின்விளக்குகள் பொருத்தும் பணிகளுக்குத் தேவையான அளவு நிதி பிரதேசசபையிடம் இல்லாத காரணத்தால், வீதிகளின் அருகிலுள்ள வீட்டு உரிமையாளர்களின் ஒத்துழைப்புடன், வீட்டு மின்சாரத்தின் மூலம் அவர்களின் வீட்டுக்கு முன்னால், வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாக பிரதேசசபை தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். இந்தநிலையில், மேலும் 300 விளக்குகள் பொருத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சிகரம் கல்வி –தொழில் வழிகாட்டல் பிரிவால் தமிழில் விபரக்கொத்து வெளியீடு





(சிகரம்)

சிகரம் கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவினால் முதன்முதலாக தமிழ் மொழியிலான கல்வி தொழில் வழிகாட்டி விபரக் கொத்து அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது

கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் சிகரம் ஊடக இல்லப்பணிப்பாளர் கே.றுசாங்கன் தலைமையில் நடைபெற்றது. விபரக்கொத்து வெளியீட்டு நிகழ்வு மற்றும் சர்வதேச கல்விக் கண்காட்சி ஆகிய நிகழ்வில் வைத்து இவ் விபரக்கொத்து வெளியிடப்பட்டது.

க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் தமது உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு என்ன செய்யலாம்? என்ன படிப்பது? எங்கே படிப்பது? என்பது தொடர்பாக வழிகாட்டல்களை சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி தொகுத்து வழங்கியிருக்கிறது. இலங்கையின் 15 தேசிய பல்கலைக் கழகங்கள், 150ற்கும் மேற்பட்ட அரச, தனியார் உயர் கல்வி, தொழிற்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் கிடைக்கப்பெறும் 500ற்கும் மேற்பட்ட உயர் கல்வி, தொழில்கல்வி வாய்ப்புக்கள் மற்றும் வெளிநாட்டுக் கல்வி தொடர்பான விபரங்கள், வழிகாட்டி ஆலோசனைகளுடன் இந்த கல்வி வழிகாட்டி விபரக்கொத்து வெளியிடப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை பேராசிரியர் மா. சின்னத்தம்பி, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் மற்றும் ஊடக இல்லத்தின் கல்வி வழிகாட்டி உத்தியோகத்தர்களான செ.கார்த்திகா, நிரூஜா ஆகியோரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட சிகரம் கல்வி வழிகாட்டி விபரக் கொத்தை, தொகுப்பில் ஆலோசகராகக் கடமையாற்றியிருந்த பேராசிரியர் மா.சின்னத்தம்பி வெளியிட்டு வைக்க, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்.

வடமராட்சிப் பகுதியிலிருந்து வவுனியா வரையிலான வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வாழ்க்கைத்தொழில் வழிகாட்டி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், அரச, தனியார் நிறுவனப் பிரதிநிதிகள், வங்கி முகாமையாளர்கள், வர்த்தகர்கள் உட்பட பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

• சர்வதேச கல்விக் கண்காட்சி சிகரம்-கல்வி தொழில் வழிகாட்டி வெளியீட்டைத் தொடர்ந்து, பிற்பகல் 1 மணியளவில், வெளிநாட்டுக் கல்வியில் நாட்டம் கொண்ட மாணவர்களுக்காக, மூன்றாவது தடவையாகவும், சர்வதேசப் பல்கலைக் கழகங்கள் பங்கேற்ற கல்விக் கண்காட்சி ஆரம்பமாகி, தொடர்ந்து 19ஆம் திகதியும் நடைபெற்றது.

பிரித்தானியா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா, அமெரிக்கா, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முன்னணிப் பல்கலைக்கழகங்களின் பட்டக்கல்வியை வழங்கும் INTI, SUNWAY, MAHSA, SEGI, MANIPAL ஆகிய 05 பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகள் இந்தக் கண்காட்சியில் நேரடியாகப் பங்கேற்று தமது பல்கலைகழகங்கள் மற்றும் கற்கைநெறிகள் தொடர்பில் விளக்கமளித்தனர். கண்காட்சி நிகழ்வுகளில் 250க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

அக்காலத்தில், குழுவினப் போராட்டங்களில், குழுத் தலைவனுடைய வெற்றிக்காக அவன் எதிரிகளுடன் போராடுவதைத் தங்களுடைய புனிதக் கடமையாக அவனைச் சார்ந்த மக்கள் கருதினார்கள். இது ராஜபக்தியாகப் போற்றப்பட்டது. சோழன் கரிகாலன் பகைவர்கள் மீது வெற்றி பெற்று வாகை சூட வேண்டுமென்பதற்காகச் சோழ இளைஞர்கள், பலிபீடத்தில் தங்கள் தலைகளைக் கொய்து காணிக்கையாகச் செலுத்தினார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. [நாம் இன்னும் அக்காலத்திலிருந்து வெகுதூரம் வந்துவிட்டதாகத் தெரியவில்லை]. 'தேசம்' என்பது ஒரு முக்கியமான கருத்தாக ஏற்றம் கொள்ளத் தொடங்கியவுடன், 'ராஜ பக்தி' 'தேச பக்தி'யாயிற்று. ராஜ விசுவாசம் உள்ளவர்களுக்கு 'ராஜ பக்தி' எவ்வளவு இலாபகரமாயிருந்ததோ அது போல், 'தேச பக்தி'யும், அவ்வுணர்வு தமக்கு இருப்பதாக அறை கூவி அறிவித்தவர்களுக்குப் பயன் அளித்தது. பூகோள அரசியல் வரைபடம் அடிக்கடி மாறிக் கொண்டு வரும்போது, தேச பக்தி என்பதற்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்? யுகோஸ்லேவியா என்ற நாடு இப்பொழுது எங்கே இருக்கிறது? போலந்து மக்கள், மிட்ச்கேவிச் என்ற கவிஞரைத் தங்கள் தேசியக் கவிஞராக்க் கொண்டாடுவது வழக்கம். மிட்ச்கேவிச் பிறந்த லிதுவேனியா இப்பொழுது தனி நாடாகிவிட்டது. இப்பொழுது அவர் எந்த நாட்டுத் தேசியப் புலவர்?

– இந்திரா பார்த்தசாரதி

மராட்டிய சிவாஜியின் சாகச வரலாற்றுக்கும், தமிழர் வீரத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. சிவாஜி தன்னுடைய நிலத்தை வெளியிலிருந்து வந்த ஆதிக்கவாதிகளான முகலாய மன்னர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகப் போரிட்டான். ஆனால் தமிழ் மன்னர்கள் மற்றவர்களின் இராஜ்ஜியங்களைத் தங்களுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டுவருவதற்காகப் போரிட்டார்கள். கிழக்காசிய நாடுகளில் பறந்த சோழ மன்னர்களின் புலிக் கொடிக்கும், அதன் பின் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் பறந்த பிரிட்டிஷ் கொடிக்கும் அதிக வித்தியாசமில்லை இரண்டிலும் தெரிவது ஒரே நிறம்தான்: அது ஏகாதிபத்தியத்தின் நிறம்.

– சாரு நிவேதிதா

தேசிய இனப் போராட்டத்தின் தற்போதைய போக்குன்னு கேட்கறீங்க. உதாரணமா அஸாமில தேசிய இனப் போராட்டம்னு சொல்றாங்க. அஸாமிலும் நாகலாந்திலும் இந்திய அரசாங்கத்தைத்தான் பிரதான எதிரியாக வரையறுத்திருக்காங்க. ஆனா பீகார் முதலான இடங்களில இருந்து அங்க இடம்பெயர்ந்த அடித்தள மக்களத்தான் முதலில அழக்கிறாங்க. இது விதிவிலக்காக இல்லாமல் ஒரு முக்கியப்போக்காவே இருக்கு. காலிஸ்தான் போராட்டத்தில் பீகாரில் இருந்து பஞ்சம் பிழைக்கப்போன கூலிகளை அடித்தார்கள் அப்போது தேசிய இனப்போராட்டமாக நியாயப்படுத்தப் பட்டது. இவர்களை வெல்வது எப்படிங்கிறதுக்கு பதிலாகக் கொல்வது எப்படிங்கிற வங்குரோத்து அரசியலை தேசிய இனப் போராட்டத்தின் ஒர் உத்தியாகப் பார்க்கிறோம். இப்படி ஒர் உத்தியை முன்வைக்கிற ஒரு போராட்டம், தன் அற அடிப்படையை அழித்துக்கொள்கிறது. திரும்ப அந்த அற அடிப்படையை முன்வைக்க முடியாது. அந்தத் தவறைத் தவறு என ஏற்றுக்கொண்டு அதைச் செய்ததற்காக ஒரு பெரிய தியாகத்தை மன்முவந்து ஏற்றுச் செய்யும்போதுதான் அந்த அறம் திருப்பிக்கிடைக்கும் வாய்ப்புண்டு. இதைத்தான் நாம் வரலாற்றில் பார்க்கிறோம்.

– நாகார்ஜுனன்

நான் தேசப் பற்றில்லாதவன் என்று சொல்வது அறிவுபூர்வமான, தரிசனமான காரணங்களால் அல்ல. தேசபக்தி என்ற பெயரில் சகமனிதர்களைக் கொன்று குவிப்பதை எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? அறுபது இலட்சம் யூதர்களை ஜெர்மானியர்கள் கொன்று குவித்தார்கள். அது ஜெர்மனியில்தானே என்று சிலர் கேட்கிறார்கள். இருக்கலாம். ஆனால் இனவதையென்னும் இருட்டறைகள் எல்லா தேச உடம்புகளிலும் உறங்கிக் கிடக்கின்றன....

நான் வாழ்ந்த காலம் முழவதும் நீங்களும் வாழ்ந்து பார்த்தால் உங்களுக்கும் புரியும், எல்லா அரசியலும் முட்டாள்தனமானது, சிறுபிள்ளைத்தனமானது.

– சார்ளி சப்ளின்

# நாடாளுமன்றத்தில் விரைவில்
# மாற்றுத்திறனாளிகளுக்கு பயன் தரும் சட்டங்கள்

(கொழும்பு)

மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும் நன்மை ஏற்படக்கூடிய வகையிலான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவிருப்பதாக சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் எம்.டி.சி.ஜயமான தெரிவித்துள்ளார்.

புதிய சட்டமூலம் தொடர்பில் சட்டவரைஞர் திணைக்களத்தின் உதவியைப் பெறவிருப்பதுடன், நீதிச் சபையுடன் கலந்துரையாடல்களை நடத்தவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தச் சட்டமூலமானது மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும் நன்மை ஏற்படக்கூடிய வகையில் அமையும்.

பார்வையிழந்தவர்களின் சம்மேளனம் ஏற்பாடு செய் திருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகிறது. 2014ஆம் ஆண்டில் அனைத்து அரசாங்க மற்றும் பொதுக் கட்டடங்கள் மாற்றுத் திறனாளிகள் இலகுவில் சென்று வரக்கூடிய வகையில் மாற்றப்பட்டிருக்கும். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று மாற்றுத்திறனாளிகள் இலகுவில் சென்று வரக்கூடிய வகையில் புதிய பொதுக் கட்டடங்கள் அமைக்கப்படாவிட்டால் அவற்றுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. இது குறித்து பிரதேச செயலகங் கள், மாநகர சபைகள், நகர சபைகளுக்கு தேசிய சபை அறிவித்துள்ளது.

இதேவேளை மாற்றுத் திறனாளிகள் 1000 பேருக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 600 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் வீடுகளை அமைப்பதற்கு 250,000 ரூபா உதவித் தெகை வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் இந்த உதவித் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு. மருத்துவரின் மருத்துவ சான்றிதழ், பிரதேச சபையினால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டை ஆகியவற்றுடன் அமைச்சிற்குவந்து விண்ணப்பிக்க முடியும்.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட 36 மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது. இதற்கமைய நாடு முழுவதிலும் 11 ஆயிரத்து 216 பேருக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையை 16,500 ஆக அதிகரிப்பதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக மாற்றுத்திறனாளிகளுக்கு ஒசுசல ஊடாக மருந்துகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவிகளை நாம் வழங்கி வருகின்றோம் என்றார்.

அதேநேரம், மாற்றுத்திறனாளிகளுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் தொழில்முறைப் பயற்சி நிலையங்கள் ஊடாகப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு பயிற்சி பெற்று வெளியேறுபவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா கொடுக்கப்பட்டு வருவதாக சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாள்ர் ஹேமச்சந்திர ஹேவகே தெரிவித்தார். இந்தக் கொடுப்பனவை 1500 ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்றார்.

## பஹ்ரேனுக்கான இலங்கைத் தூதரகம்

(கொழும்பு)

பஹ்ரேனுக்கான இலங்கை தூதரகத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுணுகம தெரிவித்துள்ளார்.

பஹ்ரேனில் சுமார் 50 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். புதிதாக ஆரம்பிக்கப்படும் தூதரகத்தின் ஊடாக தொழில் வாய்ப்புக்கள் மேம்படுத்தப்படுவதுடன் பலதரப்பட்ட விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, நைஜீரியாவிலும் இலங்கை தூதரகமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பதில் அதிபர்கள் நியமனத்திற்கு
# இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

சேவை அமைப்பு யாப்பை மீறி பதில் அதிபர்களை இணைதது் கொள்ளும் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.


இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலையில் சிரேஷ்ட ஆசிரியர்கள் இருக்கையில் அதிபருக்காக பதில் கடமையாற்றியவர்களை அதிபர் சேவை யாப்புக்கு மாறாக இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சு விடுத்த 2000/34 சுற்றறிக்கையின் மூலம் பதில் அதிபர்களை இணைத்துக் கொள்ள முடியாது. இதனை மீறி கல்வி அமைச்சு செயற்படுகிறது.

இந்த நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது சங்கம் கல்வி அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அதனையும் மீறி நியமனம் இடம்பெறுமாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# பார் சிறக்க சித்திரத் தேரேறி வருவாய்



*கடல் தவழ் மேவிய அலைதனில்*
*துயிலெழும் கார்முகில் வண்ணா*
*காத்திடும் தொழில் தனை கரந்தனில்*
*கணம் எடுத்த கருநீலக் கண்ணா*
*கோகுலத்தில் கோதையரை கொள்ளையிட்ட*
*கோகுலனே கருணை மிகு வண்ணா*
*வெண்மணி பாயென விரித்த மணலுடன்*
*பசுந்தனிர் சேர் பனைமரமும்*
*தன்னொளி புகழ்சேர் நெய்தலுடன்*
*மருதமும் உன தடியே*
*பாஞ்சாலி துயிலிடை நண்ணிய பரந்தாமா*
*பார்சிறக்க சித்திரத் தேரேறி வருவாய்.*

-அல்வையூர் யோகி-

(வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று இரதோற்சவம்)

# முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு விநியோகம்



(வடமராட்சி)

கற்கோவளம் பகுதியில் உள்ள புதுமலர்கள் முன்பள்ளிச் சிறார்களுக்கென ஈ.பி.டி.பி. இலண்டன் கிளையினரால் சத்துணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. சிறார்களுக்கான ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முகமாக வழங்கப்பட்டு வரும் இச் சத்துணவுகளை ஈ.பி.டி.பி. இலண்டன் கிளையினைச் சேர்ந்த ராஜமோகன்(தோழர் மோகன்) வழங்குகின்றார்.

இம் முன்பள்ளி உலக தரிசனம் எனும் நிறுவனத்தினால் சுனாமித்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது மேலும் முன்பள்ளி மாணவர்களின் போசாக்கு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜே.ஆர்.நிறுவனத்தினரால் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையானகால்ப் பகுதியில் சிறார்களுக்கான சத்துணவு மற்றும் சீருடைகள் ஆசிரியருக்கான ஊதியங்கள் போன்றவை ஒழுங்கான முறையில் வழங்கப்படடுள்ளது.

பின்னர் வன்னி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்கும் நோக்கில் சென்றதையடுத்தே மேற்படி திட்டம் நிறைவு செய்யப்பட்டது. எனினும் இம் முன்பள்ளிச் சிறார்களின் நிலைமையைக கருத்தில் கொண்டுள்ள ஈ.பி.டி.பி. இலண்டன் கிளையினூடாக மீண்டும் சத்து ணவு வழங்கும் திட்டத் தினை வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவரும் ஆகிய ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார். அத்துடன் ஏனைய வடமராட்சி முன்பள்ளிகளுக்கும் சத்துணவு வழங்கும் திட்டத்தினைக் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (116)

# நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

## தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

(கரணவாய்)

வடமராட்சியிலுள்ள நெல்லியடி கரவெட்டிப் பகுதிகளில் தற்போது குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும, இது தொடர்பில் பொது அமைபபுக்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாக நெல்லியடி நகர மத்தியில் அமைந்துள்ள மூன்று மதுபான நிலையங்களால் அப்பகுதி மக்கள் பெரும் அவதியுறுவதாக, தெரிவிக்கப்படுகிறது. மதுபோதையில் நடமாடும் இளைஞர்கள் பெண்பிள்ளைகளுடனான சேட்டைகளில் ஈடுபடல், கொள்ளைச் சம்பவங்களில். ஈடுபடல் போன்ற இவர்களின் அட்டகாசத்தினால் பெண்பிள்ளைகளும் பெரியவர்களும் பெரும் அச்சத்துடன் வெளியில் நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்கள் போல் இளைஞர்களை சனசமூகநிலையங்களிலோ அல்லது நூலகங்களிலோ காணமுடியாதுள்ளதுடன் சண்டைகள், வாள்வெட்டு, ஆடு மாடுகளைக் கடத்துதல் உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுவதாகவும், இங்குள்ள சிறுவர்களும் இவர்களை பின்பற்றி சிகரெட்பிடிப்பது, மது அருந்துவது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இப்பகுதியில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுக்க கிராம மட்ட பொது அமைப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழிலுள்ள 40மீற்றர் உயரமான பிரதான வீதி தண்ணீர்த் தாங்கியின் மேற்பகுதியிலும், 13 மீற்றர் உயரமான குருநகர் தண்ணீர்த்தாங்கியின் மேற்பகுதியிலும் காட்சிப்படுத்துவதற்கு விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ் விளம்பரப் பலகைகள் மூலம் தங்கள் விளம்பரத்தைக் காட்சிப்படுத்த விரும்பும் விளம்பரதாரர்கள், யாழ். மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

33. சனக்கூட்டமொன்றில் 2/9 பங்கினர் 8 பேர் ஆயின் அக்கூட்டத்திலிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை.
1. 4 2. 36 3. 92

34. சிராயாவால் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை மட்டுமே பிறந்தநாள் கொண்டாட முடியும். அப்படியாயின் அவளின் சரியான பிறந்த திகதி.
1. 04.04.1992 2. 14.04.1992 3. 29.02.1992

**கீழே சில தரவுகள் தரப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

35. விசுவின் நண்பி ராதிகா. ராதிகாவின் நண்பி கமலா. கமலாவின் நண்பி சுனிதா. ஆகவே சுனிதாவின் நண்பன் விசுவாகும்.
1. சரி 2. பிழை 3. கூறமுடியாது

36. புலி பருந்தைக் கடிக்கும். பருந்து முயலைக் கடிக்கும். ஆகவே புலி முயலைக் கடிக்கும்.
1. சரி 2. பிழை 3. கூறமுடியாது

37. ராதாவைவிட மாலா 30 ரூபா குறைவாக வைத்திருக்கின்றாள். அவர்கள் இருவரிடமும் மொத்தம் 100 ரூபா இருந்தால் மாலாவிடம் மொத்தம் எத்தனை ரூபா இருக்கும்.
1. 35 2. 60 3. 70

38. கொழும்பை நோக்கிச் சென்ற பேருந்து ஒன்று புகையிரத வண்டியில் மோதியது. இவ்விபத்துக்குக் காரணமாக இருக்கக் கூடியது.
1. பஸ் சாரதியின் கவனயீனம் ஆகும்
2. புகையிரத சாரதியின் கவனயீனம் ஆகும்
3. பலத்த காற்று வீசியமையினால் ஆகும்

39. ஞாயிற்றுக்கிழமைகளில் வீதிகளில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை குறைவாகும். அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
1. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் ஆகும்.
2. ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் பஸ் வண்டியில் பயணம் செய்வதனால் ஆகும்
3. ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் சினிமாவுக்குச் சென்றுவிடுகின்றனர் என்பதால் ஆகும்.

40. இலங்கை ஒரு தீவு ஆகும். அவ்வாறு கூறப்படுவது.
1. இலங்கையைச் சுற்றிக் கடல் இருப்பதனால் ஆகும்
2. இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் ஆகும்
3. இலங்கை மாங்காய் வடிவில் அமைந்திருப்பதனால் ஆகும்

41. இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் வேண்டும். அதற்குக் காரணம்
1. பல் துலக்கிய பின் நன்கு தூங்கலாம் என்பதால் ஆகும்
2. பல் பாதுகாக்கப்படும் என்பதால் ஆகும்
3. பற்கள் சக்தி பெறுகின்றன என்பதால் ஆகும்

42. மாணவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் வாசிப்பது சிறந்த ஓர் பழக்கமாகும். காரணம்.
1. புத்தகங்கள் வாசிப்பதனால் அறிவு விருத்தியடையும் என்பதால் ஆகும்
2. புத்தகங்கள் விலை குறைவு என்பதனால் ஆகும்
3. ஆசிரியர்களும் புத்தகங்களையே வாசிக்கின்றார்கள் என்பதனால் ஆகும்.

43. 35. 0.001, 0.01, 0.1, 0.0001 இவைகளில் பெரிய எண்
1. 0.001 2. 0.01 3. 0.1

**சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

44. வீதி விளக்கில் செம்மஞ்சள் நிறம் பயணத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்கான சமிக்ஞையாகும் ( )
45. ஆடையில் தீப்பற்றினால் விரைவாக ஓட வேண்டும் ( )
46. மின்னினால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக செயற்கைச் சுவாசம் அளிக்க வேண்டும் ( )
47. இலங்கையின் மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையம் விக்டோரியா வலு நிலையம் ஆகும். ( )
48. ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடம் கழிமுகம் எனப்படும். ( )



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I


# கல்வி முரசு

1.30 மணி



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01. கொடுக்கப்பட்ட இருப்பிடம்.
1. விடாமுயற்சியைக் குறிப்பது
2. களவாகப் பிறர் பொருளைப் பயன்படுத்துவது
3. குச்சிகளால் ஆக்கப்பட்டது.



02. கொடுக்கப்பட்ட படத்திற்குப் பொருத்தமான வாக்கியம்
1. வீரியமானதும், கொடியதும்
2. நீரிலும் நிலத்திலும் வாழ்வது
3. நச்சுத் தன்மையுடையதும் சிறு பிராணிகளை உண்ணுவதும்



**பொருத்தமான விடையைத் தெரிந்து கோடிடுக.**

03. கேலியாகவும் அறிவுத்திறனுடனும் பேசுபவர்
1. கவிஞர் 2. விகடகவி 3. புலவர் 4. பேராசிரியர்

04. 'தினேஷ் அதிகம் கெட்டுவிட்டான். அவனது பழக்கவழக்கங்கள் சரியில்லை' என்று எல்லோரும் பேசக் காரணமாக இருக்கக்கூடியது.
1. அவனுடைய பெற்றோர் அவன் மீது அதிக அன்பு காட்டுதல்
2. பாடசாலை விடுதியின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதல்
3. வயது வந்துவிட்டதால் திமிர் பிடித்துவிட்டது
4. கெட்ட நண்பர்களின் தொடர்பினால் நடத்தை மாறிவிட்டது

05. அமலன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும் அவன் அந்த நிகழ்ச்சியில் வெற்றிபெற முடியவில்லை. இதற்கான காரணமாக அமையக் கூடியது.
1. உணவு உண்ணாமல் பங்குபற்றியமை
2. அமலனை விட மிகவேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை
3. விளையாட்டு மைதானம் வேறுபட்டமை

**நெல் வயல்களில் அல்லது பண்ணைகளில் பின்வருவனவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சொல் எழுதுக.**

06. வயல்
.............................................................................................

07. மாடுகள்
.............................................................................................

08. கலப்பை
.............................................................................................

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.**

09 இன்று காலைக் கூட்டத்தின்போது வகுப்பு மாணவன் ஒருவன் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்துவிட்டான். பின்வரும் எக்காரணத்தினால் அவனுக்கு அவ்வாறு மயக்கம் ஏற்பட்டிருக்கலாம்?
1. நேற்று மாலை வரை அவன் விளையாடியமை
2. கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாது இருந்தமை
3. அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலைக்கு வந்தமை

10. புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவேன் என்று சாந்தன் கூறுகின்றான். அவன் இவ்வாறு கூறுவது,
1. இப்பரீட்சையில் எவரும் இலகுவாகச் சித்தியடையலாம் என்பதனாலாகும்
2. அவன் பரீட்சைக்கு நன்கு தயாராகி இருந்ததனாலாகும்
3. இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடைபெறுவதனாலாகும்.

11. அருண் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். எனினும் அவன் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமுகம் விக்கவில்லை. அவன் பாடசாலைக்குச் சமுகமளிக்காததற்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?
1. அது பாடசாலை விடுமுறைக் காலமாக இருந்தமை
2. அருண் சுகவீன முற்றிருந்தமை
3. பாடசாலை பஸ் வராதிருந்தமை

12. நாளைய தினமும் சூரிய வெய்யில் இல்லாவிட்டால் பின்வருவனவற்றுள் எது நடந்திட அதிக வாய்ப்புண்டு.
1. தொடர்ந்து மின்சார விளக்கு எரிந்து கொண்டிருக்கும்
2. தொடர்ந்து இருட்டாக இருக்கும்
3. மக்கள் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள்

13. நாட்டிலுள்ள மரங்கள் யாவற்றையும் வெட்டி அழித்தால் ஏற்படக்கூடிய மிகப் பிரதானமான பாதிப்பு இவற்றுள் எது?
1. வீடுகள் கட்டப்படுவது நின்றுவிடும்
2. மழை இல்லாமல்போய் வறட்சி உண்டாகும்
3. பறவைகளுக்கு கூடு கட்ட இடம் இல்லாமல் போகும்

14. ஆறு பசுக்கள் 6 சாக்குப் புல்லை 6 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு பசு 6 சாக்குப் புல்லைத் தின்று முடிப்பதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்?
1. 6 நாட்கள் 2. 12 நாட்கள் 3. 36 நாட்கள்

15. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்கு முறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திருகுணசேகரன் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. திருகுணசேகரனின் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்?
1. ஜனவரி 2. பெப்ரவரி 3. நவம்பர்

16. சரவணனுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும்போது, சமீனின் வயது 13 ஆண்டுகளாகும். சமீனின் வயது சரவணனின் வயதைவிட இரு மடங்காக இருந்தபோது சமீனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?
1. 4 ஆண்டுகள் 2. 6 ஆண்டுகள் 3. 8 ஆண்டுகள்

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

**(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)**

17. இலங்கையில் மிக நீளமான ஆறு.......................கங்கை ஆகும்.

18. நீர் மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலு நிலையம்.......................ஆகும்.

19. மிக உயரமான நீர்வீழ்ச்சி ....................... நீர்வீழ்ச்சியாகும்.

20. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப் பெறாதது.......................ஆகும்.

21. மகாவலி கங்கை உற்பத்தியாவது.......................மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.



22. உடற்பயிற்சி கண்காட்சிக்காக ஒரு வரிசையில் மாணவர்கள் நின்றனர். புனிதா முன்னிருந்து 17 ஆவதாக நின் றாள். பின்னிருந்து பார்க்கும்போது 24ஆவது ஆளாக நின்றாள். வரிசையில் நின்ற ஏனையோர் சிவப்புத் தொப்பி அணிந்திருக்க புனிதா மட்டும் வெள்ளைத் தொப்பி அணிந்திருந்தாள். அவ்வரிசையில் சிவப்புத் தொப்பி அணிந்தவர்கள் எத்தனை பேர்?
1. 41 2. 40 3. 39


23. 36 உடன் அதன் சம அளவையும், அதன் அரைப் பங்கையும், அரைப் பங்கின் அரைவாசியையும் ஒன்றையும் கூட்ட வரும் எண் யாது?
1. 127 2. 115 3. 100

24. கலா பிறந்தநினத்தை நாளை மறுதினம் வியாழக்கிழமை சிறப்பாகக் கொண்டாடுவாள். ஜெயா தனது பிறந்தநாளை நேற்று முதல்நாள் சிறப்பாகக் கொண்டாடினாள் எனின், ஜெயா பிறந்த நாளைக் கொண்டாடிய தினம்.
1. புதன்கிழமை 2. ஞாயிற்றுக்கிழமை 3. திங்கட்கிழமை


25. நான்கு வருடங்களுக்கு முன்னர் அமீரின் வயது 4 வருடங்களாகும். அப்போது அவரின் அம்மாவின் வயது அவனின் வயதைப் போல் 5 மடங்காகும். தற்போது அமீரின் அம்மாவின் வயது அமீரின் வயதின் எத்தனை மடங்கு.
1. 3 மடங்கு 2. 4 மடங்கு 3. 5 மடங்கு


26. 'கடி நாய் கவனம்' என்பது ஒரு
1. கட்டளை 2. வேண்டுகோள் 3. ஆபத்தைக் குறிக்கும் வாக்கியம்

27. எனது வயது 36. எனது அம்மாவின் வயது எனது வயதின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவாகுமெனின், நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
1. 30 2. 34 3. 3

28. 

சிறுவன் ஒருவன் மைதானமொன்றில் நடந்து சென்ற பாதைய அருகே உள்ள படம் காட்டுகின்றது. சிறுவன் ஆரம்பித்த இடம் A எழுத்தாலும் நடந்து முடிந்த இடம் B எழுத்தாலும் காட்டப்பட்டுள்ளன.
சிறுவன் எத்தனை முறை வலது பக்கமாகத் திரும்பினான்.
1. 6 2. 7 3. 8

29. 
புள்ளிக்கோட்டினால் வரையப்பட்ட பெரிய சதுரமுகியினைப் பூரணப்படுத்த உருவில் காண்பிக்கப்பட்டது போன்ற சிறிய சதுரமுகிகள் இன்னும் எத்தனை தேவை?
1. 64 2. 54 3. 44 4. 42


30. 
1. பிள்ளை ஒன்று பரீட்சைக்காகப் படிக்கின்றது.
2. பிள்ளை ஒன்று ஏதோ வேலையில் ஈடுபட்டுள்ளது
3. பிள்ளை ஒன்று இரவு நேரத்தில் படித்துக்கொண்டிருக்கிறது

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றையும் கவனமாகப் படித்து சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

31. ஒரு மாணவன் 4 பாடங்களில் பெற்ற புள்ளிகள் முறையே கணிதம் -80, தமிழ் -70, ஆங்கிலம் -60, விஞ்ஞானம் -50 ஆயின், அவனது சராசரிப் புள்ளி.
1. 65 2. 55 3. 75

32. ஒரு இலக்கத்துடன் 8ஐக் கூட்டினால் வரும் விடை அவ்விலக்கத்தின் மும்மடங்காகவும், 4 ஐக் கூட்டினால் வரும் விடை அவ்விலக்கத்தின் இரு மடங்காகவும் இருக்கும். ஆகவே அவ்விலக்கம் யாது?
1. 8 2. 4 3. 16

# பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அந்நிய முதலீடு இரத்தாகும்




(புதுடில்லி)

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அந்நிய முதலீடு இரத்தாகும் என பாரதீய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு கூட்டத்தில் பா.ஜ.க. தலைவர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு மூழ்கும் கப்பலாக உள்ளது. காங்கிரஸ் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர். காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகளிடம் ஒருமித்த கருத்து இல்லை. எனவே நாடாளுமன்றத்துக்கு எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம்.

நாடாளுமன்றத் தேர்தல் எப்போது நடப்பதாக இருந்தாலும் பாரதீய ஜனதா நிர்வாகிகளும், தொண்டர்களும் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். பா.ஜ.க.வினர் ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும். காங்கிரசிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்ற நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடைவதில் பா.ஜ.க. தொண்டர்கள் உறுதியுடன் இருக்க வேண்டும்.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பிரகாசமான எதிர்காலம் உள்ளது. சில்லறை வர்த்தகத்தில் 51 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை பாரதீய ஜனதா கட்சி கடுமையாக எதிர்க்கிறது. இந்த விஷயத்தில் பா.ஜ.க. கூட்டணி கட்சிகளிடையே எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. எனவே பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அந்நிய முதலீடு இரத்து செய்யப்படும் என்றார்.




இந்தியச் செய்திகள்

# கூடங்குளம் அணு உலைக்கெதிராக மண்ணுக்குள் புதைந்து போராட்டம்



கூடங்குளம் அணு உலைக்கு எதிராக பொதுமக்களுடன் ம.தி.மு.க தலைவர் வைகோவும் மண்ணுக்குள் புதைந்தபடி போராட்டம் நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இடிந்தகரை சர்ச் வளாகத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் வைகோ கலந்து கொண்டார்.

அங்கிருந்து மக்களுடன் ஊர்வலமாக கடற்கரை சென்று உடலை மண்ணில் புதைத்து போராட்டம் நடத்தினார்.

அவருடன் கூடங்குளம் போராட்டக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், புஷ்பராயன் உள்ளிட்டோரும் மண்ணில் புதைந்து போராட்டம் நடத்தினர். பின்னர் அவர்கள் கடலில் குளித்து போராட்டத்தை முடித்தனர்.

இப்போராட்டம் குறித்து வைகோ பேசுகையில், இடிந்தகரை மக்களுக்கு ஆதரவு தரும் அனைத்து கட்சிகளும் அங்கிருந்துகொண்டு கருத்துக்களைக் கூறக்கூடாது.


போராட்ட களத்திற்கு வந்து மக்களை நேரடியாகச் சந்தித்து அனைவரும் ஒன்று சேர்ந்து அணு உலைக்கு எதிரான கருத்துக்களை நிலை நாட்ட வேண்டும் என்றார்.

# பிரதீபாவை துரத்தும் சர்ச்சை

(புதுடில்லி)

பிரதீபா பாட்டீல், ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும், ஜனாதிபதி மாளிகையிலிருந்து, தன் சொந்த ஊருக்கு, லொறிகளில் அள்ளிச் சென்ற பரிசுப் பொருட்களை, அடுத்தாண்டு ஜனவரி 13ஆம் திகதிக்குள், திரும்ப ஒப்படைக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

பிரதீபா ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் போதே, ஏராளமான சர்ச்சைகள் எழுந்தன. இவரது, ஐந்தாண்டு பதவி காலத்தில், 22 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்தார். இதற்காக, மக்களின் வரிப் பணம், 205 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் இடையே, உறவை வளர்க்கும் வகையில், நல்லெண்ண பயண-மாக, வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். இதில் என்ன தவறு உள்ளது என, பிரதீபா தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தற்போது, ஜனாதிபதி பதவியிலிருந்து, அவர் ஓய்வு பெற்று, தன் சொந்த ஊரான, மகாராஷ்டிர மாநிலம், அமராவதியில் வசிக்கிறார். ஜனாதி-பதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும், சர்ச்சையிலிருந்து, இவர், அவ்வளவு சீக்கிரம், ஓய்வு பெற முடியாத நிலை உள்ளது.




# தைரியம் இருந்தால் கொலை செய்யட்டும்



தைரியம் இருந்தால் எனது உயிருக்கு தீவிரவாதிகள் குறிவைக்கட்டும் என்று காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்தள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தள்ளனர்.

இந்த மிரட்டலைத் தொடர்ந்து கடந்த சில தினங்களுக்கு முன்பு பஞ்சாயத்து உறுப்பினர் ஒருவர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து காஷ்மீரின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இராஜினாமா செய்யத் தொடங்கி உள்ளனர். நேற்று முன்தினம் மட்டும் 50 உறுப்பினர்கள் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர்.

இது தொடர்பாக காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, பஞ்சாயத்து தலைவர்கள், உறுப்பினர்களுக்கு தீவிரவாதிகள் குறித்து வைத்துள்ளது கோழைத்தனமானது என்றார்.

அவர்களுக்கு தைரியம் இருந்தால் என் உயிருக்குக் குறிவைக்கட்டும் என்று கூறிய உமர், தீவிரவாதிகளுக்குத் தக்க பதிலடி தரப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

# 8 கோடி மக்களின் பசிபோக்கும் உணவு தானியம் 5 ஆண்டுகளில் வீண்

(புதுடில்லி)

நாட்டில் உள்ள அரசு சேமிப்புக் கிடங்குகளில், கடந்த ஐந்தாண்டுகளில், 36 ஆயிரம் தொன் உணவு தானியங்கள் வீணடிக்கப்பட்டுள்ளதாக, அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. வீணடிக்கப்பட்ட இந்த உணவு தானியங்கள் மூலம், எட்டு கோடி மக்களின், பசியை போக்கி இருக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

தேஜிந்தர் பால் சிங் பக்கா என்பவர், கடந்த ஐந்தாண்டுகளில், இந்திய உணவு கழகத்துக்கு (எப்.சி.ஐ.) சொந்தமாக, நாடு முழுவதும் உள்ள சேமிப்புக் கிடங்குகளில், எவ்வளவு உணவு தானியங்கள் கெட்டுப் போயின என்பது பற்றிய, விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டிருந்தார்.

நாடு முழுவதும் உள்ள இந்திய உணவு கழகத்துக்கு சொந்தமான சேமிப்புக் கிடங்குகளில், சேமித்து வைக்க முடியாமல், 2008லிருந்து, இதுவரை, 36 ஆயிரம் தொன், உணவு தானியங்கள், பயன்படுத்த முடியாத அளவுக்கு, கெட்டு போயின். இதில், அதிகபட்சமாக, இந்தியாவின் உணவு தானிய களஞ்சியம் என அழைக்கப்படும், பஞ்சாபில் தான், 19.290 ஆயிரம் டன், உணவு தானியங்கள், அழுகி விட்டன. அடுத்தபடியாக, மேற்கு வங்கத்தில் உள்ள, அரசு உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்குகளில், 4,545 தொன், உணவு தானியமும், குஜராத்தில், 4,290 டன்னும், அழுகி விட்டன. வீணடிக்கப்பட்ட, இந்த, 36 ஆயிரம் டன் உணவு தானியத்தின் மூலம், ஒரே ஒரு நாளைக்கு, 440 கிராம் என்ற அளவில், எட்டு கோடி பேரின் பசியை போக்கி இருக்க முடியும். என்று அந்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் தோற்கும் நாடாளுமன்றத்துக்கு திடீர் தேர்தல் வரும்

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், கூட்டணி கட்சியினரை மதிப்பதே இல்லை. எந்த விஷயத்திலும் அவர்கள் எங்களைக் கலந்து ஆலோசிப்பது இல்லை. அவர்கள் தவ-றான கொள்கை முடிவு எடுத்திருப்பதால்தான் நாங்கள் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து விலகி உள்ளோம் என மேற்குவங்க முதலமைச்சர் திரிணாமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பனர்ஜி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர்கள் எதைச் செய்வதாக இருந்தாலும், வெளியில் சொல்லாமல் அமைதியாக செய்கிறார்கள். தங்களது அரசு நிலையான அரசு என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு உறுதியான, நிலையான அரசு அல்ல. எந்த நேரத்திலும் கவிழலாம்.

நாடாளுமன்றத்துக்கு எந்த நேரத்திலும் திடீர் தேர்தல் வரலாம். இல்லையெனில் அடுத்த ஆண்டு (2013) மார்ச் மாதம் மக்களை கவரும் வகையில் பட்ஜெட்டை தாக்கல் செய்து விட்டு தேர்தலை சந்திக்க வந்து விடுவார்கள். இதுதான் நடக்கப் போகிறது. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் நிச்சயம் காங்கிரஸ் கட்சிக்குக் கவலை தருவதாக இருக்கும்.

மேற்கு வங்க மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஒரு நாடாளுமன்ற தொகுதியில் கூட வெல்ல முடியாது. எனவே காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலகியதற்காக நான் துளி அளவு கூட கவலைப்படவில்லை. சில்லறை வர்த்தகத்தில் 51 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை எதிர்த்து யார் தீர்மானம் கொண்டு வந்தாலும் அதை ஆதரிக்க நாங்கள் தயாராக உள்ளோம் என்றார்.

வாழ்க வளமுடன்




தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : இ. கெயின்ஸ் கிறைஸ்ட்

முகவரி: குருநகர், யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# பொருளாதார நெருக்கடியை எதிர்த்து ஸ்பெயினில் மக்கள் போராட்டம்






ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயினில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுவதால், மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது.

ஸ்பெயினில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதற்கு அந்நாட்டு ரியல் எஸ்டேட் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணம் என்று கருதப்படுகிறது.

இந்த நெருக்கடி காரணமாக இலட்சக்கணக்கானோர் வேலையிழந்து தவிக்கின்றனர், ஏராளமான குடும்பங்கள் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்து அரசைக் கண்டித்து தலைநகர் மாட்ரிட்டில் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நிதிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் சம்பளக் குறைப்புகள் மற்றும் விற்பனை வரி அதிகரிப்பு உட்பட அரசின் கொள்கைகள், ஏழை மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஸ்பெயினின் வங்கிகளுக்கு 100 பில்லியன் யூரோ நிதியுதவி வழங்குவதாக ஐரோப்பிய நாடுகள் அறிவித்திருப்பது அவர்களின் கோபத்தை அதிகரித்துள்ளது.


இதைக் கண்டித்தும், அரசைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "வெட்கம்", "பதவி விலகு" என்பவை உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக் கோஷமிட்டனர்.

நாடாளுமன்ற கட்டடத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள உலோகத் தடுப்புகளை உடைக்க சிலர் முயன்றனர். இதையடுத்து அவர்களை விரட்டிச் சென்ற பொலிஸார் தடியடி நடத்தி, சிலரை வானில் ஏற்றினர்.

நாடாளுமன்றத்தை சுற்றியுள்ள தெருக்களில் திரண்டிருந்த நூற்றுக்கணக்கானவர்களை பொலிஸார் விரட்டியடித்தனர். சிலர் கலைந்து செல்லாமல் தரையில் அமர்ந்தபடி மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் மீது பொலிஸார் ரப்பர் தோட்டாக்களால் சுட்டனர். இதில் 14 பேர் காயமடைந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அமெரிக்காவை சீனா 5 ஆண்டுகளில் தோற்கடிக்கும்



அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவை சீனா தோற்கடித்து விடும் என கட்டடங்கள் குறித்த ஆய்வு அமைப்பான மோசியன்சிட்டி நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

தற்போது உலகிலேயே அதிக உயரங்கள் கொண்ட கட்டடங்கள் அமெரிக்காவில் தான் உள்ளன. இங்கு 152 மீற்றருக்கு மேற்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை 533 ஆகும்.

சீனாவில் இதன் எண்ணிக்கை 470 ஆக உள்ளது. ஆனால் 2017 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வானுயர்ந்த கட்டடங்களின் எண்ணிக்கை 539 ஆக இருக்கும்.

அதே ஆண்டில் சீனாவில் இந்த அளவுக்கு உயரம் கொண்ட கட்டடங்களின் எண்ணிக்கை 802 ஆக அதிகரிக்கும்.


அடுத்த 10 ஆண்டுகளில், சீனாவில் இந்த எண்ணிக்கை 1,318 ஆகவும், அமெரிக்காவில் 563 ஆகவும் இருக்கும் என்று தெரியவந்துள்ளது.

தற்போது சீனாவில் 332 வானுயர்ந்த கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 516 கட்டடங்கள் கட்டுமானப் பணிக்காகக் காத்திருக்கின்றன.

ஆனால் அமெரிக்காவில் 6 கட்டடங்கள் மட்டுமே கட்டுமானத்தில் உள்ளன. மேலும், 24 கட்டடங்கள் வரைபட அளவில் உள்ளன.

இதில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம், சீனாவின் பெரிய நகரங்களான ஹாங்காய், தலைநகர் பீஜிங் மட்டுமில்லாமல், 2ம் நிலை நகரங்களிலும் வானுயர்ந்த கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதுதான்.

# உலக வெப்பமடைதலால் 10 கோடிபேர் உயிரிழப்பர்



உலக வெப்பமயமாதல் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால், 2030ஆம் ஆண்டுக்குள் உலகளவில் 10 கோடிக்கும் அதிகமானவர்கள் இறக்க நேரிடும் என்ற அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது.

2010 மற்றும் 2030ஆம் ஆண்டில் வானிலை. மாற்றத்தால் மனித இனம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து டாரா என்ற மனித இன நலம் சார்ந்த நிறுவனம் ஆய்வு நடத்தியது.

அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வாயுக்கள் அதிகளவில் வெளியிடப்படுவதால், உலகில் வெப்ப நிலை அதிகரித்து வருகிறது, துருவப் பகுதிகளிலும் பனி உருகுகிறது.

இதனால் வறட்சி, கடல் நீர் மட்டம் உயர்தல் போன்ற அபாயங்கள் ஏற்படும். தற்போது காற்று மாசு, பசி, நோய் போன்றவற்றால் 50 இலட்சம் பேர் ஆண்டு தோறும் இறக்கின்றனர்.

பெற்றோலியப் பொருட்களைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் 2030ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 60 இலட்சமாக உயரும்.

இவர்களில் 90வீதம் பேர் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அடுத்த 10 ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 10 கோடி பேர் உயிரிழக்கக்கூடும்.

தொழிற்துறைகள் வளர்வதற்கு முன்பு இருந்ததை விட இப்போது 0.8 சதவீதம் அளவுக்கு வெப்பநிலை உயர்ந்துள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு கேன்கன் சுற்றுச்சூழல் மாநாட்டின் போது, உலக வெப்பத்தை 2 சென்ரிகிரேட் வரை குறைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள 200க்கும் மேற்பட்ட நாடுகள் ஒப்புக்கொண்டன.

ஆனால், மாசு ஏற்படுத்தும் வாயுக்களின் அளவைப் பார்த்தால் 2 சென்ரிகிரேட் வெப்பத்தைக் குறைப்பது கூட போதுமானதாக இருக்காது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# ஐபோன்களை தீயில் போடுங்கள் யூதர்களுக்கு மத குரு உத்தரவு



யூதர்கள் யாரும் ஐபோன்களை வாங்க வேண்டாம், அப்படி வாங்கியிருந்தால் அதை தீயில் போட்டு கொளுத்தி விடுங்கள் என இஸ்ரேலிய மத குரு ஒருவர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக யூத மதத்தின் பழமைவாத பிரிவைச் சேர்ந்த மத குரு ரபி சயிம் கனிவெஸ்கி என்பவர் யூத நாளிதழான யாதேத் நீமன் என்ற நாளிதழில் வெளியிட்டுள்ள செய்தியில், அப்பிள் நிறுவனத்தின் ஐபோன்கள் யூத மதக் கோட்பாடுகளை மீறுவதாக உள்ளது.

மேலும் தொலைக்காட்சி, கணினி போன்ற எதையுமே பயன்படுத்தக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

யூத மதத்தின் புனித மாதம் தொடங்கியுள்ள நிலையில், இந்தக் கட்டளையை மதகுரு பிறப்பித்துள்ளமை பலரிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உலகச் செய்திகள்

# வைரம், தங்கம் பதித்த விலை உயர்ந்த உடை

வைரம் மற்றும் தங்கத்தினால் ஆன உலகின் மிக விலை உயர்ந்த உடை உக்ரைன் நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆடையில் மொத்தம் 50 வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இவை 2 கரட் தரத்திலானவை. மொத்தம் 13 கிலோ எடையில் இந்த உடை உள்ளது. விலை 5.7 மில்லியன் டொலர்களாகும்.



இங்கிலாந்தை சேர்ந்த டெப்பி விங்காம் என்பவர் இந்த உடையை வடிவமைத்து, உக்ரைனில் நடந்த உடை அலங்கார வார நிகழ்ச்சியின் போது அறிமுகப்படுத்தினார்.

ஆறு மாதங்கள் வரை கையாலேயே இதை நெய்தும், தைத்தும் உருவாக்கியுள்ளார் டெப்பி.


கேட் வின்ஸ்லெட், ஹிலாரி ஸ்வாங்க், அமி ஸ்மார்ட், கேத்தரின் ஜென்கின்ஸ், ரெபெக்கா பெர்குசன் உள்ளிட்ட திரைப்பட நட்சத்திரங்களின் அழகு நிபுணராக டெப்பி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐஸ்லாந்திற்கு இடம் பெயர்கிறது விக்கிலீக்ஸ்

அமெரிக்கா தொடர்பான இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய விக்கிலீக்ஸ் இணையத்தளம், புதிய வடிவில் ஐஸ்லாந்திலிருந்து இயங்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுவரையிலும் அமெரிக்கா தொடர்பான தகவல்களுக்கே முக்கியத்துவம் அளித்து வந்த விக்கிலீக்ஸ், இனிமேல் உலக நாடுகள் முழுவதிலும் கவனம் செலுத்தப் போவதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

ஊடகங்களின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் புதிய சட்டமொன்று சமீபத்தில் ஐஸ்லாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதால், விக்கிலீக்ஸ் அங்கு இடம்பெறத் தீர்மானித்துள்ளது.




இந்த இணையத்தளத்தின் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே தற்சமயம் பாலியல் சர்ச்சை குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருப்பதால், பிரிட்டனில் உள்ள ஈக்வடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

இதுநாள் வரையிலும் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் தலைமை சுவீடனிலிருந்து இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# காதலித்தால் கசையடி

ஆப்கானிஸ்தானில் வாலிபர் ஒருவரைக் காதலித்த இளம் பெண் ஒருவருக்கு 100 கசையடிகள் தண்டனை வழங்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் உள்ள ஜுகுரி பகுதியை சேர்ந்த இளம் பெண் சபீரா(வயது 16). என்பவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவரைக் காதலித்து வந்தார். அப்பகுதியில் காதல் செய்வது குற்றம் என்பதால், இந்த விவாகரம் குறித்து மத குருவிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

உடனே அவர் சபீராவுக்கு 100 கசையடிகள் கொடுக்க உத்தரவிட்டார். அதன்படி சபீராவை மக்கள் முன்னிலையில் நிறுத்தி, இளைஞர்கள் அவருக்கு 100 கசையடிகள் கொடுத்தனர்.

இதன் காரணமாக படுகாயமடைந்த நிலையில், சபீரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சபீராவை காதலித்த வாலிபருக்கு ரூ.80 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க காணொளிக்கு யாழ். மாநகர சபையில் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தி அமெரிக்காவில் திரைப்படம் ஒன்று வெளிவந்திருப்பதற்கு யாழ். மாநகர சபை கண்டனம் வெளியிட்டு நேற்று பிரேரணை ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். மாநகர சபையின் 9 ஆவது மாதாந்தப் பொதுக் கூட்டம் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது யாழ். மாநகர சபைஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் யாழ். முஸ்லிம் மாநகர சபை உறுப்பினர்களான எம்.எம்.முஸ்தபா, அஸ்கர்ரோமி, முகமட் ரமீஸ்கரபுள்நாம் ஆகியோர் நபிகள் நாயகத்தை இழிவு படுத்தி அமெரிக்காவில் வெளிவந்திருக்கும் குறித்த திரைப்படத்திற்குக் கண்டனம் வெளியிட்டு பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தனர். இந்தப் பிரேரணையை யாழ். மாநகர ஆணையாளர் பிரணவநாதன் சபையில் வாசித்துக் காண்பித்ததுடன் அதற்கான சபையினரின் அனுமதியையும் கோரினர். இந்தப் பிரேரணை ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு மாநகர சபை உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்ததனை அடுத்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் இந்தப் பிரேரணையை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பிவைக்கவும் சபை நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பா,இ)

# சட்டவிரோத பல் வைத்திய நிலையம் யாழ். நகரில் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் அனுமதி பெற்று இயங்கிய பல் வைத்திய நிலையமொன்று நேற்று முன்தினம் யாழ். பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு அதன் உரிமையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரில் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் நிலையங்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினது அனுமதியைப் பெற்றித்தல் வேண்டும் அவ்வாறு அனுமதி பெற்று இயங்காத வைத்திய நிலையங்கள் மீது யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தினர் பரிசோதனை மேற்கொண்டு அவ்வாறு சட்டத்திற்குப் புறம்பாக இயங்குபவை மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றமை தெரிந்ததே.

ஏற்கனவேயும் இவ்வாறு பல அனுமதியற்று இயங்கிய பல் வைத்திய நிலையங்கள் பொலிஸாரின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# முதலாவது சூப்பர் 8 ஆட்டத்தில் இலங்கை அணி அபாரவெற்றி

(கொழும்பு)


உலகக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் சூப்பர் - 8 ஆட்டமொன்றில் இலங்கை அணி சூப்பர் ஓவரில் அபார வெற்றிபெற்றது.

உலகக் கிண்ண ருவென்ரி - 20 தொடரின் சூப்பர் - 8 ஆட்டங்கள் நேற்று ஆரம்பமானது. இதில் பல்லேகல விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி நிக்கோலின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. இறுதியில் நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிக்கோல் 58, குப்ரில் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குலசேகர இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி டில்சானின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் சரசாரியான ஓட்ட எண்ணிக்கையைப்பெற்று வந்தது. இருப்பினும் டில்சானின் ஆட்டமிழப்பின் பின்னர் இலங்கை அணி சற்றுத் தடுமாறியது. இறுதி ஒரு பந்தில் ஒரு ஓட்டத்தைப் பெறவேண்டிய நிலையில் திரிமன்னி ஆட்டமிழக்க ஆட்டம் சமநிலை பெற்றது. 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டில்சான் 76, மஹேல ஜெயவர்த்தன 44, சங்கக்கார 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ப்ராங்கிலின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்நிலையில் வெற்றியைத் தீர்மானிக்கும் வகையில் சூப்பர் ஓவர் முறை பயன்படுத்தப்பட்டது. இதில் முதலில் ஆடிய இலங்கை அணி ஒரு ஓவரில் ஒரு விக்கெட்டை இழந்து 13 ஓட்டங்களைப் பெற்றது. 14 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி ஒரு விக்கெட்டை இழந்து எட்டு ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக டில்சான் தெரிவானார்.



# விருப்பு வாக்கு முறையினை இரத்துச்செய்ய நடவடிக்கை

எதிர்காலத்தில் விருப்புவாக்கு முறைமையினை இல்லாது செய்வது தொடர்பாக அரசாங்கம் ஆலோசித்து வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் பிரதானிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை அலரிமாளிகையில் நடைபெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் இலங்கையில் நீதித்துறை எதிர்கொள்ளும் அழுத்தங்கள், நீதித்துறையுடனான மோதல்கள்மற்றும் சமகாலப் பிரச்சினைகள் முக்கியமாக பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது. தேர்தல் முறைமை குறித்து பேசுகையில் விருப்பு வாக்குமுறைமை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டதாகவும், எதிர்வரும் காலத்தில் விருப்பு வாக்கு முறைமையினை இல்லாது செய்வது குறித்து பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம திகதி நாடாளுமன்றில் சமர்பிக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். ஜனாதிபதியின் இந்தியப்பயணம் குறித்து பேசுகையில், தாம் எதிர்பார்த்ததைவிட இந்தியப்பயணம் திருப்திகரமாக அமைந்திருந்ததாகவும் குறிப்பிட்டார்.

## உயர் பாதுகாப்பு...

இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனாலும் உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றக் கோரும் விவகாரம் குறித்து நிச்சயம் ஆராயப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு புதுடில்லியில் பேசப்பட வேண்டிய விவகாரங்கள் குறித்து ஆராய்ந்து முடிவு செய்யும். நாடாளுமன்றத் தெரிவுக்குழு, இடம் பெயர்ந்துள்ள எஞ்சிய மக்களின் மீள்குடி யமர்வு, இந்தியாவில் உள்ள அகதிகளின் நிலை குறித்தும் கலந்துரையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், வடக்கிலுள்ள உயர்பாதுகாப்பு வலய விவகாரம் நிச்சயம் ஆராயப்படும். ஏனென்றால், வலிகாமம் வடக்கில் 28 ஆயிரம் பேர் இந்த உயர்பாதுகாப்பு வலயத்தினால், தமது வீடுகளில் குடியமர முடியாமல் உள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உயர்பாதுகாப்பு வலயங்கள் இல்லை என்று கூறினாலும், இந்தப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் இருபதாண்டுகளாக மீளக்குடியேற்றப்பட முடியாத நிலையில் உள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தெரிவுக்குழுவில்...

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறவேண்டும் என்று பரவலாகக் கோரப்பட்டுவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளவேண்டும் என்று நானும் அழைப்பு விடுக்கின்றேன். காரணம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒரு விடயமே கூட்டமைப்புக்கு போதுமானது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்துகொண்ட பின்னரும் ஆறுமாத காலத்தில் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்படாவிடின் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப்படுத்தவும் முடியும். இதனை நானும் ஏற்றுக்கொள்கின்றேன் என்றார்.

## உதய...

நிதித்துவப் படுத்தி சட்டத்தரணி தேவராஜன் ரங்கன், உதயன் பத்திரிகையை பிரதிநிதித்து வப்படுத்தி ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்சவை நெறிப்படுத்தி சட்டத்தரணி லக்சிறி பெர்னாண்டோ ஆஜராகியிருந்தனர்.

## கிளி. பல்கலை...

கல்வித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், பொதுமக்கள் என சுமார் 3000 பேர் வரையில் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றனர்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் ஊக்குவிப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவ்ருமான முருகேசு சந்திரகுமார், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் கந்தசாமி, விவசாயபீடப் பீடாதிபதி பேராசிரியர் மிகுந்தன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் என இன்னும் பலர் இந்தச் சிரமதானப் பணியில் பங்கேற்று, கிளிநொச்சி மாவட்டத்தில் அமையவிருக்கும் பல்கலைக்கழக வளாகங்களை அமைப்பதற்கான மக்கள் பங்கேற்பை உற்சாகமூட்டினர்.

இங்கு அமையவிருக்கும் தமது விவசாய பீடத்துக்கான பணிகளில் நேரடியாகப் பங்கேற்கவேண்டும் என்ற உணர்வுடன், யாழ். பல்கலைக் கழகத்தின் விவசாயபீட மாணவர்கள் பலர் இந்தச் சிரமதானத்தில் பங்கெடுத்திருந்தனர். யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து விசேட பஸ் மூலம் கிளிநொச்சிக்கு வந்திருந்த இவர்கள் உணர்வுடன் சிரமதானத்தில் தங்களை ஈடுபடுத்தியிருந்தனர்.

இலங்கையின் தமிழ்ப் பகுதியொன்றில் அமையவிருக்கும் முதலாவது பொறியியல் பீடம் என்ற உற்சாகத்துடன், இலங்கை பொறியியலாளர் ஒன்றியத்தைச் சேர்ந்த பல பொறியியலாளர்கள், பொறியியலாளர்களான இரணைமடு குடிநீர் திட்டத்தின் பணிப்பாளர் பாரதிதாசன், நீர்ப்பாசனத் திணைக்கள வடமாகாண உதவித் திட்டப் பணிப்பாளர் சுதாகரன் உள்ளிட்ட பலருடன் சிரமதானத்தில் பங்கேற்றிருந்தனர். இவர்களுடன், மொறட்டுவ, பேராதனை, றுகுணு ஆகிய பல்கலைக்கழகப் பொறியியல் பீடங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், மாணவர்கள் பலரும் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இது எங்களுடைய பகுதியில அமையவிருக்கும் பல்கலைக் கழகம். இதனை வளப்படுத்திப் பலப்படுத்தவேண்டியது எங்கள் அனைவரதும் கடமை என்று, சிரமதானத்தில் பங்கேற்றிருந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் பலரும் உற்சாகத்துடன் தெரிவித்தனர்.

சிரமதானப் பணிகளின் முடிவில், கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் பங்கயற்செல்வன் தலைமையில் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. இங்கு ஊரையாற்றிய யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி கல்வி வலய நிர்வாகப் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் இருதயராஜ் ஆகியோர், சிரமதானத்தில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன், கிளிநொச்சி மாவட்டமே திரண்டு வந்து அமையவிருக்கும் பல்கலைக்கழக வளாகங்களுக்கு வழங்கியிருக்கும் வரவேற்புக்கு மதிப்பளித்து கூடிய விரைவில் இந்த வளாகங்கள் கிளிநொச்சியில் இயங்கச் செய்யப்படும் என்று உறுதிமொழி வழங்கினர்.

## ஏவுகணைகள்...

அவதானிக்க முடிந்தது. இந்தச் செய்தி முற்றிலும் அடிப்படையற்றது. திரித்துக் கூறப்பட்டது. முக்கிய பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பும் நோக்கில் வெளியிடப்பட்டதாக ஊகிக்கப்படும் இந்தச் செய்திகளால், பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில் இந்தியாவும், இலங்கையும் கொண்டுள்ள நெருக்கமான உறவுகளைப் பாதிக்காது எனக் கூறப்பட்டுள்ளது

# இணக்கப்பாடு ஏற்பட்டால் முதலமைச்சர் பதவி பகிர்வு

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு


கிழக்கு மாகாகண சபை முதலமைச்சர் பதவியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தலா இரண்டரை வருடங்களுக்கு பங்குபோட்டுக்கொள்ள அரசியலமைப்பில் இடமில்லாத போதும் இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக இது சாத்தியமே என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வர்ராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் ஊடக அமைச்சில் இடம்பெற்ற போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறுகையில்:

ஐந்து வருடகால முதலமைச்சர் பதவியை பாதிக் காலத்துக்கு இருவர் பகிர்ந்து கொள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் இடமில்லை. ஆனால் முதலமைச்சராக நியமிக்கப்பட்ட ஒருவரை இடையில் பதவியில் இருந்து நீக்குவதற்கு சட்டத்தில் இடமுண்டு.

எனினும் இரு கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டால் அதன் மூலம் முதலமைச்சர் பதவியை இருவர் பகிர்ந்து கொள்ளலாம். அதில் பிரச்சினை ஒன்றும் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் நேற்றைய சப்பறத்திருவிழாவின்போது...



படப்பிடிப்பு : விசிந்தன

## பல்கலை மாணவர் வீதி விபத்தில் பலி

கம்பஹா - இம்புல்கொட பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

குறித்த வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதி ஏற்பட்ட விபத்தில் அதில் இருந்த இரு மாணவர்களும் உயிரிழந்தனர்.

இவர்கள் றுஹுணு பல்கலைக்கழக மாணவர்கள் எனவும் நாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டங்களுக்கு முன்நின்று உழைப்பவர்கள் எனவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## கரவெட்டி அஞ்சல் அதிபர் தேசிய மட்டத்தில் முதலிடம்

(வடமராட்சி)



138 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட தேசிய மட்ட அஞ்சல் தினப் பேச்சுப் போட்டியில் கரவெட்டி அஞ்சல் அதிபர் அ.அருளானந்தசோதி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற அஞ்சல் உத்தியோகத்தர், ஊழியர்களுக்கான பேச்சுப் போட்டியிலேயே இவர் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் கடந்த12 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் முதன்முறையாக தேசிய மட்டத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் 1ஆம் இடத்தைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும். (12)

## 2013 நிதி ஒதுக்கீடு சட்ட வரைவு; அமைச்சரவை அனுமதியளிப்பு

2013 ஆம் நிதி ஆண்டுக்கென நிதி அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமர்பித்த நிதி ஒதுக்கீட்டு சட்ட வரைவுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

ஒவ்வொரு அமைச்சு, வரி பிறநடுநிலை விடயங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு யதார்த்தமான வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்கும் வகையில் குறித்த மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013-2015 நடுத்தர கால செலவு கட்டமைப்பு அடையாளம் முன்னுரிமைகள் மற்றும் ஏற்கனவே தொடங்கியது மற்றும் நடந்து வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்தல் குறித்து இதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2013 இல் அரசின் செலவு 2520 பில்லியன் ரூபா எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் என்பவற்றை 7 வீதம் பேண எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்ட முதல் வாசிப்பு ஒக்ரோபர் 9 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்பிக்கப்படவுள்ள நிலையில் இரண்டாம் வாசிப்புக்கென வரவு - செலவுத் திட்ட நவம்பர் 8 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## 2010, 11 பட்டதாரிகளுக்கு விரைவில் பயிலுநர் நியமனம்

2010ஆம் 2011ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பட்டம் பெற்றவர்களுக்கான பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு மிக விரைவில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

கடந்த 16ஆம் 17ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்களின் அறிக்கைகள் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு அறிக்கைகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், கடந்த காலங்களில் பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களைப் பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களில் உள்வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் தற்போது நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான ஆட்சேர்ப்புக்கான உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்கள் கிடைக்கும் வரை நேர்முகத் தேர்வுக்கு தோற்றியவர்களை பொறுமையுடன் இருக்குமாறும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

## இடி மின்னலின் தாக்கம் நடுக்கடலில் குடும்பஸ்தர் மரணம்

தம்பாட்டி கடற்பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் நடுக்கடலில் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தனது மகனுடன் சிறு படகு ஒன்றில் தொழிலுக்காகச் சென்ற சமயம் கடுமையான இடி மின்னலுடன் மழை பொழிந்தது.

அச்சமயம் தனக்கு நெஞ்சுக்குத்து ஏற்பட்டிருப்பதாகவும், கரைக்கு படகைத் திருப்பும் படியும் தன்னுடன் கூடச் சென்ற மகனிடம் கூறியிருக்கிறார். எனினும் கரை திரும்ப முன்னரே அவரது உயிர் பிரிந்து விட்டதாக அவரது மகன் தெரிவித்தார்.

சுப்பிரமணியம் துரைராசா (வயது-62) என்பவரே இவ்வாறு கடலில் மரணமடைந்துள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (85)

## கடற்படைக்கு புதிய தளபதி

இலங்கையின் புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே நேற்றுப் பதவியேற்றார்.

இலங்கையின் 18 ஆவது கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் வைஸ் அட்மிரல் ஆக ஜனாதிபதியினால் தரமுயர்த்தப்பட்டுள்ளார். கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த புதிய கடற்படைத் தளபதிக்கு கடற்படையினரால் விசேட மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடற்படைத் தலைமையகத்திலுள்ள அலுவலகத்தில் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

## படையினரை விலகக் கோரி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

வடக்கில் மக்களுடைய நிலங்களிலுள்ள படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுக் கிளிநொச்சி நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் மாவட்டச் செயலகத்தின் முன்பாக கூடிய நூற்றுக்கும் குறைவான மக்கள் தமது நிலங்களில் உள்ள படையினர் அங்கிருந்து வெளியேறவேண்டும் என பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது. இதில் காணாமற்போனோர் மற்றும் சிறைகளிலுள்ளோரின் உறவினரும் கலந்து கொண்டு தங்கள் உறவினர்களை மீட்டுத்தருமாறு கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்திருந்தனர். மேலும் இந்தப் போராட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, வினோநோகராதலிங்கம் மற்றும் சி.சிறிதரன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்

போராட்டத்தின் முடிவில் ஐ.நா.வுக்கான வதிவிடப்பிரதி நிதியிடமும், மாவட்டச் செயலரிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன.




## விபத்தில் சாரதி பலி

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் எண்ணெய்த் தாங்கியொன்றின் சாரதி பலியாகியுள்ளதாக ஓமந்தை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எண்ணெய்த் தாங்கியொன்றே நேற்று அதிகாலை ஏ-9 வீதியால் ஓமந்தை பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வரும் போது மரத்துடன் மோதுண்டே இவ்விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்துக்கான காரணம் அதிவேகமாக வாகனத்தை செலுத்தியமையா அல்லது சாரதி நித்திரையடைந்தமையால் ஏற்பட்டதா என்பது தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை
5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு
9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம்
12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.